ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...


# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

நவம்பர் - 2024









"எல்லா வேண்டல்களையும்
மன்றாட்டுகளையும் இறைவனிடம்
எழுப்புங்கள். எப்போதும் தூய ஆவியின்
துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள்.
இதில் உறுதியாய் நிலைத்திருந்து,
விழிப்பாயிருங்கள். இறைமக்கள்
அனைவருக்காகவும் மன்றாடுங்கள்"

எபேசியர் 6:18

"குளிர்ந்த பானம்
கோடைக் காலத்தில்
எப்படி இருக்குமோ அப்படியே
உண்மையான தூதர் தம்மை
அனுப்பினவருக்கு இருப்பார்
அவர் தம் தலைவருக்குப்
புத்துயிரளிப்பார்."

நீதிமொழிகள் 25:13



ISSN : 2012-0352 Reg.No.1873/07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் - 54 நவம்பர் 2024 இதழ் - 10

- **ஆசிரியர் :**
  அருட்தந்தை. பிறைனர் செலர்
- **துணையாசிரியர் :**
  திரு. பெஸ்லியோ வாஸ்
- **நூல் வடிவமைப்பு :**
  திருமதி. சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபாற் செலவு உட்பட)


## அன்புடன் உங்களோடு ...

கிறிஸ்தவர்களாகிய நாம் நவம்பர் மாதம் முழுவதும் சிறப்பாக 2ம் திகதி அன்று இறந்தவர்களை நினைவு கூறுகின்றோம். இறந்தவர்களை நினைக்கின்ற அதேவேளையில், நம்முடைய இறப்பைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டப்படுகிறோம். இறப்புப் பற்றிய சிந்தனை நம் வாழ்விற்கு வளமை சேர்க்கும் என்ற காரணத்தினால் இறப்பைப் பற்றிய ஒருசில சிந்தனைகளை இங்கு பார்க்கலாம்.

மனிதர்களாகிய நாம் இதை நமது வாழ்விலிருந்து தள்ளிவைக்கத்தான் விரும்புகிறோம். இன்றைய அறிவியல் மற்றும் மருத்துவ முன்னேற்றங்கள் மனிதர்களின் வாழ்நாள்களின் ஆயுள் காலத்தைக் கூட்டியிருக்கின்றன. இதை ஒரு புறம் வரவேற்கின்ற அதேவேளையில், மறுபுறம் மனிதர் தம் மன அளவிலும் சாவைத் தள்ளி வைத்திருப்பது குறித்து வேதனை அடையவேண்டியிருக்கிறது. காரணம், அதனால் பல தீமைகள் மனித வாழ்வுக்குள் நுழைகின்றன. உதாரணமாக, சாவைப்பற்றி அதிகம் சிந்திக்காத வர்கள் தாங்கள் என்றும் நிலையாக வாழ்வார்கள் என்று எண்ணிக் கொண்டு பொருள் குவிப்பு, ஆணவம், அதிகாரம் செலுத்துதல், சுயநல எண்ணங்கள் முதலியவற்றில் மூழ்கியிருக்கிறார்கள்.

மனித வாழ்வின் சிறப்பு பிறர்மைய வாழ்வில்தான் அடங்கியுள்ளது. இதை நமக்கு இறப்பு நினைவூட்டுகிறது. இறப்பைப் பற்றிச் சிந்திப்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. மகாத்மா காந்தி "ஒரு மனிதன் வளமையாக இருப்பதற்கு, வாழ்வைவிட சாவு மிக அவசியமானது" என்று கூறினார். இறைமகன் இயேசு கூட அடிக்கடி தன் சாவைப்பற்றிச் சிந்தித்தார். சாவைத் தன் முன் கொண்டு வாழ்ந்தார். எனவேதான் தன் சிலுவைச் சாவை முன்னறிவித்தார். இறப்பைப்பற்றி அடிக்கடி சிந்திப்பது நமது வாழ்வுக்கு எவ்வாறு வளமை சேர்க்கிறது என்று ஒரு சில காரியங்களைப் பார்க்கலாம்.

அ) சாவின் விளிம்பைத் தொட்டு வந்த (விபத்திலிருந்து அற்புதமாக தப்பித்தோ, நோயிலிருந்து காப்பற்றப்பட்டோ) நபர்கள் தங்களுக்கு மீண்டும் கிடைத்த வாழ்வை முன்போல் சராசரித்தனமாக வாழாமல் சிறப்பான விதத்தில் வாழ ஆரம்பிக்கிறார்கள். வாழ்வின் முக்கியத்துவத்தை அந்நிகழ்வு அவர்களுக்கு உணர்த்தியதே காரணம்

ஆ) இறப்பைப் பற்றிச் சிந்திப்பவர்கள் கோழை உள்ளத்தைக் களைந்தெறிந்து துணிந்து முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இறப்பு என்பது உறுதியான ஒன்று என்பதைத் தெளிவாக அறிந்த பின்னர் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்து கோழையாக வாழ்வதால் என்ன பயன் என்ற கோள்வியை எழுப்புகின்றனர்.

– தொடர்ச்சி 18ம் பக்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


1. இயேசுவின் இலக்கு இறையாட்சி ................................ 02

2. அடக்கம் ................................................................ 05

3. பார்வைகள் பலவிதம் ............................................ 06

4. கடுகுக் கதை ........................................................ 07

5. சவால்களில் உள்ளது சந்தர்ப்பம் ............................ 08

6. மேரி கியூரி ............................................................ 10

7. மாணவர் பக்கம் .................................................... 11

8. மதில் பூனை ........................................................ 12

9. வளமும் மகிழ்ச்சியும் மக்களின் ............................ 15

10. இலக்கிய மஞ்சரி .................................................. 17

11. கண் கெட்ட பிறகு ................................................ 19

12. மனநலப் பாதிப்புகள் .............................................. 22

13. அரசியல் ................................................................ 24

14. வினாவிடைப் போட்டி .............................................. 26


15. திருஅவைச் செய்திகள் .......................................... 27

16. போட்டி முடிவுகள் .................................................. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவின் இலக்கு இறையாட்சி

வெ. மரிய அல்போன்ஸ்

*இயேசு ஒரு ஞானி. அவரை ஒரு மனிதர் எனவும் குறிப்பிடலாம். அருஞ்செயல்கள் ஆற்றிய ஓர் அறிவாளி எனவும் இயேசுவை அழைக்கலாம். உண்மையைத் தேடியவர்களுக்கு இயேசு ஓர் ஆசிரியர். யூதர், கிரேக்கர் என அவரால் ஈர்க்கப்பட்டவர் பலர். ஒரு மெசியா எனவும் அவர் கருதப்பட்டார். யூத ஆட்சியாளர்கள் ஆளுநர் பிலாத்துவுடன் இணைந்து தீர்ப்பிட்டுத் தண்டித்தாலும் அவரைப் பின்பற்றியவர்கள் அவர் மீது வைத்திருந்த அன்பு குறையவேயில்லை. இறைவாக்குரைத்தவர்கள் அவரில் நிறைவேறும் என முன்னறிவித்த அருஞ்செயல்களில் ஒன்றாக இவர் இறந்து மூன்றாம் நாளில் உயிர்பெற்று காட்சி தந்தார். அவரது பெயரில் செயல்படும் கிறிஸ்தவ இனம் அழியாது இந்நாளிலும் தொடர்ந்து செயல்படுகிறது.*

**தீத்துஸ் பிளேவியஸ் ஜோசேபஸ் (37 — 100)**
யூத வரலாற்று ஆசிரியர்

**செயல்களால் போதித்த இயேசு**

பிறப்பிலிருந்து உயிர்ப்பு வரையிலும் இயேசுவின் வாழ்வும் வார்த்தைகளும் முந்தைய இறைவாக்கினர்களிலிருந்து வேறுபட்டதாக மக்களுக்குத் தெரிந்தது. யாவும் புதியதாகவே மக்களுக்குத் தோன்றின. எனவே "அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்குக் கற்பித்து வந்தார்" என இயேசுவின் போதனையைக் குறித்து வியப்புற்றதாகக் குறிப்பிடுகின்றது மாற்கு நற்செய்தி (மாற்கு 1:22). மட்டுமன்று, "இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே!" என மக்கள் திகைப்புற்றதாகக் குறிப்பிடுகிறார் நற்செய்தியாளர் மாற்கு (1:27).

நற்செய்தி நூல்களை மேலோட்டமாக வாசிக்கும்போது இது புலப்படும்.

இயேசுவின் பிறப்பே புதுமையானது; புரட்சியானது. திருத்தூதர் பவுல் எழுதுவது போல் "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.... சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலி 2:7-8).

யோவான் நற்செய்தி விவரிக்கும் இயேசுவின் இறுதி இராவுணவு இன்னும் புரட்சிகரமானாதாக அமைகிறது. சீடரின் காலடிகளைக் கழுவிய பணிவு எவரும் எதிர்பாராதது; மாற்று சமூகத்திற்கான அடித்தளமாகியது. "ஆகவே, ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" (யோவா 13:14). இது இயேசு சீடர்களுக்குக் காட்டிய முன்மாதிரி (யோவா 13:15).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற இனத் தலைவர்களிடமிருந்து மாறுபட்ட செயல்பாட்டிற்கான அழைப்பு. "உங்களிடமிருந்து அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்; உங்களுள் பணியாளராக இருக்கட்டும்" (மத் 20:26-27) என்ற வரிகள் பொருளுள்ள வாழ்விற்கான புதிய கொள்கை. இவை விவாதத்திற்கான சித்தாந்தங்கள் அன்று; வாழ்வதற்கான நெறிமுறைகள்! இயேசுவே வாழ்ந்து காட்டிய வழிமுறைகள். "மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மத் 20:28). இயேசுவின் போதனை முறை, "என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" (மத் 11:29). என்றே அமைந்தது.

**இறையாட்சியே இயேசுவின் இலக்கு**

இயேசுவின் இலக்கு இறையாட்சி. அவரது கனவும் கவனமும் இறையாட்சியில் நிலைத்தது.

விவிலியத்தில் 480 முறை இறையாட்சி அல்லது அதற்கு பொருத்தமான (விண்ணரசு) சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் களஞ்சியங்கள் தெளிவாக்குகின்றன.

"இறையாட்சி" என்ற பதம் 122 முறை நற்செய்திகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 99 முறை இயேசுவின் வாய்மொழியாகவே வந்துள்ளது. இதிலிருந்தே இதன் வலியுறுத்தல் புலப்படும்.

மாற்கு நற்செய்தியில் இயேசுவின் முதல் பேச்சே இறையாட்சி தொடர்பானது. "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:15) என்று அமைகிறது இயேசுவின் முழக்கம்.

**இவ்வுலகில் துவங்கும் இறையாட்சி**

பலர் இறையாட்சியை இறப்பிற்குப் பிந்தைய விண்ணுலகுடன் பொருத்திப்பேசுவது வழக்கம். ஆனால் இயேசுவின் பார்வை வித்தியாசமானது. இந்த மண்ணுலகிலேயே இறையாட்சி துவங்குகிறது. இதை இயேசுவின் வார்த்தைகளே வழிமொழிகின்றன.

- இறையாட்சியின் மறைபொருள் அறியும் வாய்ப்பு சீடர்களுக்குக் கிடைத்துள்ளது (லூக் 8:10).
- "விண்ணரசு நெருங்கி வந்து விட்டது" என சீடர்கள் முழக்கமிட அறிவுரை (மத் 10:7).
- கண்களுக்குப் புலப்படும் முறையில் வருவதில்லை இறையாட்சி. எங்கு நிகழ்கிறது என்றும் கணிப்பதற்கில்லை. காரணம் "இறையாட்சி உங்கள் நடுவே செயல்படுகிறது" (லூக் 17:21).
- பேய்கள் ஓட்டப்படுகின்றன. கடவுளின் ஆவியே இச்செயலுக்குக் காரணம். எனவே இறையாட்சி வந்துள்ளது என்பதன் அடையாளம் (மத்12:28).
- திருமுழுக்கு யோவானுடைய சீடர்கள் "வரவிருப்பவர் நீர்தாமா? என்ற கேள்விக்கான பதில் இறையாட்சியின் வருகைக்கான பதிலாகிறது (மத் 11:2-6: லூக் 7:18-22).
  - பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்.
  - நடக்க இயலாதவர் நடக்கின்றனர்.
  - தொழுநோயாளிகள் நலமடைகின்றனர்.
  - காது கேளாதோர் கேட்கின்றனர்.
  - இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர்.
  - ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது.

இவ்வுலகில் துவங்கப்படுவதுடன் இவ்வுலகு சார்ந்ததாக உள்ளது இறையாட்சி.

**இறையாட்சி உடல் சார்ந்தது**

மக்களினத்தாரின் தீர்ப்பு அமையும் விதம் இறையாட்சியை உலகோடும் உடலோடும் தொடர்புபடுத்துகிறது. இது வியப்பும் விந்தையுமானது; ஏற்கவும் சிரமமானது; இப்படி அமைய இயலுமா என்ற ஐயமும் எழுப்புவது. மத்தேயு 25:31-46 புதியது. புரட்சிகரமானது. இவ்வுலகு சார்ந்தது. நம் உடல் தேவைகளுக்கு முதன்மை தருவது. புதிய வெளிச்சத்தில் கடவுளைப் பார்க்க வைப்பது. சமயம், வழிபாடு, இறைவேண்டல், சடங்குகள், ஆன்மீகப் பயிற்சிகளை பழிப்பது: மதிப்பிற்குரிய புனிதச் செயல்களைப் புறந்தள்ளுவது. இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். இறையறிவு, இறைவார்த்தை, இறைவேண்டல், இறைவழிபாடு, இறையனுபவம் என்பவை வழக்கமாக புனிதமற்றவையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்படும் உடல் தேவைகளில் மையம் கொள்கின்றன.

- பசிக்கு உணவு
- தாகத்திற்கு தண்ணீர்
- அன்னியருக்கு வரவேற்பு
- நோயில் கவனிப்பு
- சிறைக் காவலுக்கு சந்திப்பு

இவ்வாறு இயேசுவின் இறையாட்சி ஒரு மாற்றுப்பார்வையை முன்வைக்கிறது. ஆன்மாவே தூயது என்ற பழைய பார்வையை மாற்றுகிறது. ஆன்மத் தேடல் பிறரின் உடல்-உளத் தேவைகளை நிறைவேற்றுவதில் நிறைவடையச் செய்கிறது.

**சீடரை இயக்கமாக்கும் இறையாட்சி**

இறையாட்சியில் யாவரும் சமம். உயர்ந்தவர் தாழ்ந்தவர் பேதங்களுக்கு இடமில்லை (மாற்கு 10:35-45). அடிப்படையான சமூக வேறுபாடாக நிலவிய ஆண், பெண் பேதங்களும் அடியோடு தகர்க்கப்படுகின்றன. "இனி உங்களுடையே... ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை..." (கலா 3:28). பெண் சீடர்கள் தங்கள் உடமைகளைக் கொண்டு இயேசுவிற்கு பணியாற்றியதைக் குறிப்பிடுகிறது லூக்கா நற்செய்தி (லூக் 8:1-3).

திருத்தூதர் பணிகள் முன் வைக்கும் "நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை" (2:42-47) மற்றும் "பொது உடைமை" (4:32-37) பகுதிகளின் தன்மைகளை இயக்கக் கூறுகளாகக் கணிக்கலாம். எனவேதான் "புதிய நெறி" (திப 9:2) எனத் தொடக்கத் திருஅவை அழைக்கப்பட்டது.

திருத்தூதர் பவுல் குறிப்பிடும் "கிறிஸ்தவ நெறி" (திப 22:4) இயக்கத்தன்மைகளையே இயம்புகின்றன. இத்தகைய புரிதல் இன்றியமையாதது. கிறிஸ்தவம் சமயக்கூறுகளை உள்ளடக்காமல், இறுக்கம் தளர்ந்த ஓர் உயிரோட்டமான இயக்கமாக அனைத்து மக்களையும் ஈர்த்தது.

**இறையாட்சியின் முன்னுரிமை வறியோர்**

இயேசுவின் படிப்பினையும் திருத்தூதர்களின் போதனைகளும் வறியோர் நலனுக்கு முன்னுரிமை தந்தன. வறிய மக்கள் மீது இயேசுவிற்கு இருந்த பரிவும் கரிசனையும் உலகறிந்தவை. மாடடைக் குடிலில் பிறப்பு (லூக் 2:7), இடையர்களுக்கு முதலாவதாக அறிவிக்கப்பட்ட இயேசுவின் பிறப்புச்செய்தி (லூக் 2:8-12) வறியோருக்கான நற்செய்தி என்றே பொருள்கொள்கிறோம்.

இயேசுவின் பணித்திட்டம் (லூக் 4:16-19), ஏழைகளுக்கு நற்செய்தி, ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை என்பவை வறியோர் நலன் சார்ந்த இறையாட்சியின் முதன்மைகள். திரண்டிருந்த மக்கள் மீது இயேசுவிற்கு ஏற்பட்ட பரிவும் (மத் 5:35-38) இதற்குச் சான்று. மத்தேயு நற்செய்தியின் மலைப்பொழிவும் (மத் 5:1-12) ஏழையின் பேறுகளை வரிசைப்படுத்துகிறது. இறையாட்சியின் கரிசனைக்கு இதுவும் எடுத்துக்காட்டு.

சீடருக்கான தகுதியை எளிய வாழ்வு முறையாகக் காட்டுவதும் வறியோர் பெறும் முதலிடத்தை எண்பிகிறது (மாற் 6:7-13). நான்கு நற்செய்திகளும் குறிப்பிடும் அப்பங்களை பலுகச் செய்வது, வறியவர் முதன்மையின் மறுபக்கம் (மாற் 6:30-44, ஒத்தமைவுகள் மற்றும் யோவா 6:1-14).

**இறையாட்சிக்கான இறைவேண்டல்**

இயேசு சீடர்களுக்குக் கற்றுத்தந்த இறைவேண்டல் இறையாட்சியின் வருகையை மையப்படுத்தியது. இறையாட்சியின் பண்புகளை செபத்தின் உட்கூறுகளை வெளிப்படுத்துகின்றன (மத் 6:9-15, லூக் 11:2-4).

வெற்று வார்த்தைகளால் அலங்கரிக்கப்படாதது இயேசுவின் இறைவேண்டல். தனிப்பட்ட தேவைகள், சமூக நலன்கள், ஆன்மீக நம்பிக்கைகள், நல்லாட்சிக்கான எதிர்பார்ப்புகள் என பொருளுள்ள மன்றாட்டாகிறது.

**திருஅவை இறையாட்சியின் பணியாள்**

சீடர்களின் முற்றுப்பெறாத முயற்சி திருஅவையின் தொடக்கமாக அமைகிறது. திருஅவை இவ்வாறு இறையாட்சியின் பணியாளாகப் பொறுப்பேற்கிறது. இயேசுவின் இலட்சியக்கனவை - இறையாட்சியை - நனவாக்கும் இயக்கமாக மாறுகிறது திருஅவை.

உலகின் மாற்றங்களுக்கு உகந்த பதில் தரும் திருஅவையின் பணிக்கு முடிவில்லை. உலகம் உள்ள வரையிலும் திருஅவையின் பணி தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டெனீஸ்டன்

# அடக்கம்

காலச்சக்கரமதன் கண்ணிகள்
காண்கிலார் கண்ணுடை மானிடர்
புள்ளியென பெயருடை முற்றுக்கு
படபடக்குமந்த நேத்திர இமைநொடியளவே
ஆவி பறந்தோடி ஆலவிழுதோ
அல்லது ஆங்குடை மரமது மீதிலோ ஊசலாடுமே!

பட்டென கதைமுடியும் பட்டமரம் போலாகும்,
சட்டமன்றங்களிலேற்றிடினும் தோற்றேபோகும்.
செத்தபின் பிணமென்னும் பெயரெடுக்கும்
சிந்தையற்ற சீராளரே
எத்தனைநாள் வாழவென்று இத்தனை ஆட்டம்...?

கொள்ளையடித்து சேர்த்தென்ன
கொன்றுகுவித்துப் போட்டென்ன
பள்ளம் பறித்து வாழ்ந்தென்ன
உள்ளமெரிந்து சபித்தென்ன
உள்ளது கூடு விட்டுப்போனால்
எள்ளளவும் பயனற்றுப் போகுமையா உடம்பு.

ஆடையுடுத்திப் பார்த்து
அணிகலன் போட்டுப்பார்த்து
ஆயிரம் மாடி தொடுத்து
கோடிவிலை குளிர்பானம் பருகி
நாடுபல நல்ல மருத்துவர் நாடி
பூப்போல தேகம் வளர்த்தாய்
புழுவுண்ணத்தான் புரிவதெப்போதோ!

ஆவியடங்க முன்னமே ஆட்டமடங்க
சிந்தை கொள்வதென்பதே சிறப்பு.
நான்மறை வேதமும் நல்லொருவனை
செதுக்க உளியேந்தும் நாளெல்லாம்...
நாலாயிரம் தடைவிதிக்க நடைபோடவும்
நம்மிடையே நயவஞ்சகர் பிறக்காமலில்லை.

மாவீரனை விழுங்கி மார்தட்டியதில்லை...
மகாத்மாவை விழுங்கியதில் மனமுடைந்ததுமில்லை.
காலகாலமாய் கனதுளைகள் கடத்தியாயிற்று
பலபேரை உச்சந்தலை மீதிலொரு நாள்,
ஊசலாட்ட திகதியோடே
உயிரடங்கும் நாளதுவாய் சேர்த்து
நாவிதன் மொட்டை வழித்தாலும் தெரியாது
நாளைக்கோ நாள்பல கடந்தோ நிச்சயம் வந்தேயாகும்!


மண்வீட்டோடு அடங்க நினைத்தால் மனிதராயிரு.....!
மரணித்தும் வாழ நினைத்தால் புனிதனாயிரு.....!
ஆறறிவிருந்தால் விடை கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைகள் பலவிதம் – 31

– ஹென்றி



அற்புதமான சிற்பி ஒருவர், ஒருநாள் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது ஒரு கடையருகே கனத்த பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார். ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சி அவருக்கு.

அதன்பின் அந்தக் கடைக்காரரிடம், "ஐயா, இந்தப் பாறாங்கல் தங்களுக்குத் தேவையா அல்லது இதை நான் எடுத்துச் செல்லலாமா?" என்று கேட்டார்.

"தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள்... இது இந்த இடத்தில் பெரிய இடையூறாகக் கிடக்கிறது... போவோர் வருவோரெல்லாம் இடறி விழுகின்றனர்" என்றார் கடைக்காரர்.

பாறாங்கல்லை உருட்டிச் சென்ற அந்தச் சிற்பி, அதை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார். அந்தச் சிலை கடைத் தெருவில் விலைக்கு வந்தது. போட்டி போட்டுக்கொண்டு மக்கள் அதை விலைக்குக் கேட்டனர். அப்படிக் கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக் காரரும் ஒருவர். முடிவில் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையை வாங்கிக்கொண்டார். அந்தச் சிற்பியை மறந்துவிட்ட கடைக்காரர் சிற்பியிடம், "அற்புதமான இந்த சிலைக்குரிய கல்லை எந்த மலையிலிருந்து எடுத்து வந்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு சிற்பி, "வேறு எங்கிருந்தும் இல்லை, தங்கள் கடை வாசலில்தான் இதைக் கண்டெடுத்தேன். என்னை உங்களுக்கு நினைவில்லையா? ஆறு மாதங்களுக்கு முன் இடையூறாகக் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல்தான் இது" என்றார். கடைக்காரர் வியந்தார்.


"தங்கள் பார்வையில் இது தடைக்கல்லாய்த் தெரிந்தது. என் பார்வையிலோ கடவுளைப் பொதிந்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. வேண்டாத பகுதியையெல்லாம் செதுக்கி எடுத்தேன், உள்ளே இருந்த கடவுளின் உருவம் வெளிப்பட்டது" என்றார் சிற்பி.

**ஆம்... நாமும் வாழ்வில் தேவையற்ற வார்த்தைகளை நீக்கினால் விலை மதிப்பற்ற மனிதராய் வாழ்ந்து காண்பிக்கலாம்.**

---

நோபல் பரிசு: இந்த நோபல் பரிசுகள் துறை ரீதியாக வழங்கப்படும். முதலில் எப்போதும் மருத்துவத்திற்கான நோபல் பரிசே வழங்கப்படும். அதன்படி இப்போது 2024ம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசு இருவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விக்டர் அம்ப்ரோஸ், கோரி ருவ்குன் ஆகிய இருவருக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ ஆர்என்ஏவை கண்டுபிடித்ததற்காக இருவருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நோபல் பரிசுடன் 11 மில்லியன் ஸ்வீடிஷ் கிரௌன்ஸ் பரிசுத் தொகையாக வழங்கப்படும். ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள தேர்வுக் குழு இந்த விருது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த இரு அமெரிக்க ஆய்வாளர்கள் மைக்ரோஆர்என்ஏவைக் கண்டு பிடித்ததற்காகவும், டிரான்ஸ்கிரிப்ஷனலுக்குப் பிறகு (post-transcriptional) மரபணு ஒழுங்குமுறையில் இந்த மைக்ரோ ஆர்என்ஏ எந்தளவுக்கு உதவுகிறது என்பதையே இவர்கள் கண்டுபிடித்தனர். நமது குரோமோசோம்களில் உள்ள தகவல்கள் தான், நமது




செல்கள் அனைத்திற்கும் ஒரு கையேடாக (instruction manual) செயல்படுகிறது. ஒருவர் உடலில் இருக்கும் அனைத்து செல்களும் ஒரே மரபணுக்களைக் கொண்டிருந்தாலும், தசை, நரம்பு போல சில வகை செல்களுக்கு மட்டும் தனித்துவமான பண்புகள் இருக்கும். இது ஜீன் ரெகுலேஷன் மூலம் நடக்கிறது. ஒவ்வொரு செல்லும் தனக்குத் தேவையான மரபணுக்களை மட்டுமே செயல்படுத்துகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்ரன் மோட்டார் சைக்கிள் டயருக்கு பெச் போடுவதற்காக கடையில் நின்று கொண்டிருந்தார். கடையின் பெயர் "பல்தசார் டயர் கிளினிக்". அன்ரனுக்கு இப்படியான பெயர்களை ரசிக்கப் பிடிக்கும். அந்தோனியார் கோவிலுக்கு அண்மையில் பற்கள் கட்டும் கடை ஒன்று (முன்னர்). அதன் பெயர் "டென்டல் மெக்கானிக் சொப்"

அன்ரனின் பள்ளித்தோழன்(ர்) ஒருவரும் தனது மோட்டார் பைக் டயரை மாற்றவேண்டுமா என்று விசாரிக்க வந்திருந்தார். அவரின் 'டயர் எல்லாம் தேய்தேய் என்று தேய்ந்து' பொலிஸ் பண்ணிய மாதிரி காணப்பட்டது.

"கிறவல் றோட்டில் ஓடினால் சின்னக்கல்லுப் பட்டாலும் ஓட்டையாகிவிடும். தார் றோட்டில் ஓடினால் கிளம்பியிருக்கும் கல்லுகள் டயரைப் பதம் பாக்கும். கார்ப்பட் றோட்டில் என்றால் ஒரு இரண்டு கிலோமீற்றர் தாக்குப்பிடிக்கும். மாபிள் போட்ட றோட்டில் ஓடினால் வழுக்கி வழுக்கி பைக் விழும்" என்று பல்தசார் கூறிச் சிரித்தார்.

"எந்த றோட்டில் மாபிள் போட்டிருக்கிறார்கள்? புது டயர் போடனும் என்டா நேரடியாக சொல்லு டாப்பா... அது சரி டயர் இப்ப என்ன வில...?" என்று சிரித்துக்கொண்டே தோழர் கேட்டார். "டயர் வில ஆறாயிரத்து அறுநூறு ரூபா; அறுநூறு ரூபா டிஸ்கவுன்ட், மாத்திர கூலி இருநூறு ரூபா..." என்றார் பல்தசார்.

"என்ன வில விக்குது டயர்... என்ட பிள்ளை யாரப்பா..." என்று தோழர் சொல்லிக்கொண்டிருக் கையில் டயர் கிளினிக்கில் இருந்து 'ரேடியோ' வில் சுருக்க செய்தியொன்று சொல்லியது. "ஜனாதிபதி மாளிகையின் முன் ஒப்படைக்கப் பட்ட வாகனத்தின் டயர் ஒன்றின் விலை ரூபா ஐம்பது இலட்சம் என்று தெரியவருகின்றது".

உடனே தன்னையறியாமல் பல்தசார் சொன் னார், (எழுத முடியாத செந்தமிழ் சொல்) "இந்த டயர் காசுக்கு புத்தம் புதிய இந்திய தயாரிப்பு சொகுசு வாகனமொன்ட வாங்கிடலாம்..."

தோழர் பேசாமல் ஆறாயிரத்து இருநூறு ரூபாவை பல்தசாரிடம் கொடுத்தார்.

அன்ரன் தன் மோட்டார் சைக்கிள் டயரை கவனமாக தடவிப் பாத்தார்....




இந்த வருடம் [2024] இலக்கியத்துக்கான நோபல் பரிசு தென் கொரியாவை சேர்ந்த பெண் எழுத்தாளர் ஹான் காங் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தென் கொரியாவில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் எழுத்தாளர் ஆவார். 53 வயதான புனைகதை எழுத்தாளர் ஹான் காங் 2007 ஆம் ஆண்டு வெளியான "தி வெஜிடேரியன்" [The Vegetarian] என்ற நாவல் மூலம் உலக அரங்கிற்குத் தெரியவந்தார். இந்த நாவலுக்காக இவருக்கு 2016 ஆம் ஆண்டில் "மேன் புக்கர்" சர்வதேச பரிசு வழங்கப்பட்டது.

ஆணாதிக்கம், துயரம், வன்முறை உள்ளிட்டவற்றைச் சுற்றி ஹான் காங் எழுத்துகள் உள்ளன. தி வெஜிடேரியன் நாவல், உணவு சாப்பிட பெண்களுக்கு இருந்த விதிமுறைகளை மறுக்கும் பெண்ணை பற்றிய கதை. இதுபோல "தி ஒயிட் புக்", "ஹ்யூமன் ஆக்ட்ஸ்", "கிரீக் லெசன்ஸ்" ஆகியவையும் ஹான் காங் எழுதிய ஏனைய புகழ்பெற்ற படைப்புகள் ஆகும்.

- 'மாலைமலர்' -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே. எச். இரத்தினராஜா



# சவால்களில் உள்ளது சந்தர்ப்பம்

ஸ்டார்க்வில்லே என்னும் பெயருடைய நகரம் அமெரிக்காவின் மிஸிசிப்பி மாநிலத்தில் உள்ளது. அங்கே வளர்ந்து வந்த ஓர் இளைஞனின் தந்தை கட்டிடங்கள் கட்டுவதற்கு செங்கல் சுமக்கும் கூலியாளாக வேலை பார்த்து வந்தார். விடுமுறை நாட்களில் அப்பாவுக்கு உதவியாக இந்த இளைஞனும் செல்வான். கனவுகள் சுமக்கும் கல்லூரி மாணவனுக்கு செங்கல் சுமப்பது என்பது சந்தோசமான வேலையல்ல. ஓரிடத்தில் நின்றுகொண்டு தன்னிடம் வீசப்படும் செங்கற்களைப் பிடித்து அதே வேகத்தில் அடுத்தவரிடம் வீசுகிற வேலையில் வெய்யிலில் உலர்ந்தும், வியர்வையில் நனைந்தும் மிகவும் சிரமப்படவேண்டியிருக்கும்.

ஆனால், அந்த இளைஞன் மன உறுதியுடன் செயற்பட்டான். செங் கற்கள் கைகளில் வந்து விழுகிற போதெல்லாம், கரங்களைப்போலவே அவன் மனதிலும் உரமேறிக்கொண்டிருந்தது. ஒவ்வொருமுறை செங்கல்லைப் பிடிக்கும்போதும் வாழ்வில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று உறுதி கொண்டான். அந்த இளைஞன் கைகளில் செங்கல்லைத் தாங்கிக்கொண்டே ஒரு கால்பந்து வீரனாய் வரவேண்டுமென்ற கனவுக்கு நெய் வார்த்துக் கொண்டிருந்தான். அவனது அந்தக்கனவு நனவானது. உலகப்புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரனாய் வளர்ந்த ஜெர்ரி ரைஸ்தான் அந்த இளைஞன்.

கால்பந்தாட்டத்தில் ஈடுபாடு இல்லாதவர்கள்கூட "நட்சத்திரங்களுடன் ஒரு நடனம்" *(Dancing with the Stars)* தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் அவரை அறிந்துகொண்டிருந்தார்கள். தன் வாழ்வில் தன்னைப் பிழிந்த வறுமையை, தான் பிழிந்து சாரமெடுத்து சாறு குடித்து வெற்றி வேட்கையைத் தணித்துக்கொண்ட ஜெர்ரி ரைஸ் தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோது சொன்ன விடயங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற வெற்றிச் சூத்திரங்கள்.

**சவால்களில் உள்ளது சந்தர்ப்பம்**

தன்னை நோக்கி வீசப்பட்ட செங்கற்களைப் பிடிப்பது, வேறு வழியில்லாத வேலை; வெட்டி வேலையென்று பலரும் விமர்சனம் செய்தார்கள். ஆனால், அந்த வலி மிகுந்த பொழுதுகளை எதிர்காலத்தின் வரைபடத்தை இதயத்தில் வரைந்து கொள்ளப்பயன்படுத்தினார் ஜெர்ரி ரைஸ். அந்த வலியில் விழுந்த வியர்வைத் துளிகள் வைராக்கியத்தினை வளர்த்தன; எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலைக் கொடுத்தன; கொளுத்தும் வெயிலில் அசையாது நிற்கும் பொறுமை, வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பக்குவத்தைப் பரிசாகத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றியின் பாதையில் வலிகள் சகஜம்**

வலியும், வேதனையும் தங்கத்தை வாட்டும் நெருப்பின் வேலையைத்தான் செய்கின்றன என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தார் ஜெர்ரி ரைஸ். உள்ளங்கைகளில் வந்து விழுந்த ஒவ்வொரு கல்லும் "நீ செங்கல் சுமக்கப் பிறந்த வனல்ல" என்று சொல்லிக் கொண்டேயிருந்தது. அந்த வலியே அவரது கனவுகளுக்கு அடித்தளம் அமைத்தது. யாருக்கோ வீடு கட்டப் பயன்பட்ட செங்கல் ஜெர்ரி ரைஸின் கனவுகளுக்கும் அத்தி வாரமாக அமைந்தது. வருகிறபோது வலி அவமானமாகத்தான் இருக்கிறது. ஆனால், வெற்றி நோக்கிய பாதைகளில் அதுவே உந்து சக்தியாகப் பயன்படுகிறது.

**எதையுமே வெறுக்காதீர்கள்**

ஜெர்ரி ரைஸிற்கு மட்டுமல்ல, அனைவருக் குமே அவர்கள் விரும்பாத ஒன்றைத்தான் வாழ்க்கை முதலில் கொடுக்கிறது. மற்றவர்கள் வெறுத்தொதுக்கி, விலகி ஓடிய விடயங்களில் துணிந்து முன்னின்றதன் மூலம் ஜெர்ரி ரைஸ் விலை மதிப்பில்லாத அனுபவத்தைப் பரிசாய்ப் பெற்றார். கடினமான வேலைகள்தான் உண்மை யிலேயே நாம் யார் என்பதை நமக்குக் காட்டு கின்றன. அதன் மூலம் நம்முடைய தனித்திறன்கள் என்னவென்று நமக்கும் இந்த உலகுக்கும் முதன் முதலாகத் தெரிய வருகின்றது.

**முடிவெடுங்கள்! செயல்படுங்கள்!**

ஒன்றில் இறங்க வேண்டுமா என்ற தயக்கம் எழுகிறபோது அந்தத் தயக்கத்தைத் தழுவி வாழ்ந்தால், அதைத் தவிர்த்துவிட வேண்டும் என்றுதான் உள்மனது சொல்லும். ஆனால், இறங்கிப் பார்ப்பது என்று முடிவெடுத்தவுடனேயே புத்தம் புதிய உலகம் நமக்காகத் திறந்து கொள்கி றது. எந்தச் சூழலிலும் துணிவாக முடிவெடுப்பதும், தெளிவாக செயற்படுவதும் புத்தம் புதிய வெற்றி களை நமக்குப் பரிசாகக் கொடுக்கும்.

**கூடுதல் தகுதிகளை வளர்த்தெடுங்கள்**

கால்பந்தாட்ட வீரராக வருவது என்று ஜெர்ரி ரைஸ் முடிவெடுத்ததுமே, தினமும் ஐந்து மைல் தூரம் மலைப்பகுதிகளில் ஓடுவதை வழங்கமாகக் கொண்டார். உடலுறுதியை எவ்வளவு தூரம் வளர்த்தெடுக்கிறோமோ, அந்த அளவுக்கு சிறந்த விளையாட்டு வீரராக வர முடியும் என்பதுதான் அவருடைய எண்ணம். கால்பந்தாட்டம் கற்றுக் கொள்வது முதல் தகுதி. இந்தக் கூடுதல் தகுதியை வளர்த்ததால் தனித்தன்மையுடன் விளங்கினார் ஜெர்ரி ரைஸ்.

மிகப்பெரிய சாதனையாளராக வளர வேண்டு மென்று விரும்பிவிட்டால், குறிக்கோள் நோக்கிக் கடுமையாக உழைக்க வேண்டும்; கூடுதல் தகுதி களை வளர்க்க வேண்டும்; சவால்களையே சந்தர்ப்பமாக்கி வெற்றி பெற வேண்டும். இது ஜெர்ரி ரைஸுக்கு மட்டுமல்ல நம் ஒவ்வொரு வருக்குமே வாழ்க்கை தருகின்ற வெற்றிச் சூத்திரம்.

தோமஸ் அல்வா எடிசன் அவர்கள் வெஸ்டர்ன் யூனியன் நிறுவனத்திற்கு ஒரு இயந்திரம் வடிவமைத்துக் கொடுத்தார். அதற்கு என்ன விலையை நிர்ணயம் செய்யலாம் என்பதில் சற்றுக் குழப்பமாக இருந்தது. எடிசனும் அவரது மனைவியும் இதுபற்றி விவாதித்தார்கள். எடிசன் மனைவி "இருபதாயிரம் டொலர் கேளுங்கள்" என்றார். எடிசனோ, 'இந்தத் தொகை பெரிய தொகையாக இருந்தால், யாரும் வாங்காமல் போனால் என்ன செய்வது?' என்று சிந்தித்துக்கொண்டு இருந்தார். பணம் தருவதற்காக நிறுவனத்தின் ஒரு மூத்த அதிகாரியை வெஸ்டர்ன் யூனியன் நிறுவனம் அனுப்பி இருந்தது. இயந்திரத்துக்கான விலையை அதிகாரி கேட்டார். எடிசன் சில நிமிடம் மௌனமாக இருந்தார். எப்படிக் கேட்பது என்று யோசித்துக் கொண்டே இருந்தார். பொறுமை இழந்த அந்த நிறுவனத்தின் அதிகாரி, "எடிசன் சார், இதோ உங்கள் இயந்திரத்திற்கான விலை முதல் தவணையாக நூறு ஆயிரம் டொலர்கள்" என்று சொல்லி அதற்கான காசோலையைக் கொடுத்தார். மீதி எவ்வளவு என்று சொல்லி அனுப்புங்கள். காசோலையை அனுப்பி வைக்கின்றோம்" என்று கூறி இயந்திரத்தை எடுத்துச் சென்றார். அவசரப்படாமல், பொறுமை காத்த எடிசனுக்கு நான்கு மடங்கு இலாபம் கிடைத்தது. அவசரப்பட்ட நிறுவனத்தின் அதிகாரியால் நான்கு மடங்கு நட்டம் நிறுவனத்திற்கு ஏற்பட்டது. அவசரம் நமக்கு சிப்பிகளைத் தரலாம். ஆனால், பொறுமையே முத்துகளைத் தர முடியும்.

ஒருவனுடைய திறமைகளை
வெற்றிகளாக உருமாற்றித் தருவது
அவரின் பொறுமையே! பொறுமை
அனுபவத்தின் வெளிப்பாடு!
அதுவே வாழ்வின் அலைகளை
எதிர்கொள்ளும் துடுப்பாய்
பயன் தரும்....



**பொறுமை**


**அனுபவத்தின் வெளிப்பாடு ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேரி கியூரி Marie Salomea Skłodowska-Curie

( நவம்பர் 7, 1867 - ஜூலை 4, 1934)



நோபல் பரிசு பெற்ற உலகின் முதல் பெண் மேரி கியூரி. இயற்பியலுக்கு ஒன்று, வேதியியலுக்கு இன்னொன்று என இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்றவர் இன்றுவரை இவர் மட்டுமே.

மேரி கியூரியின் இயற்பெயர் மரியா ஸ்கொடோஸ்கா. இவர் போலந்து நாட்டில் வார்ஸா நகரில் 1867, நவம்பர் 7 அன்று பிறந்தார். பெற்றோர் இருவருமே ஆசிரியர்கள். மரியா பிறந்து வளர்ந்த காலத்தில் ரஷ்யாவிடம் அடிமை நாடாக போலந்து இருந்தது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடங்கள் ரஷ்ய மொழியிலேயே சொல்லித்தரப்பட்டன. போலந்து மக்களின் தாய்மொழியான போலிய மொழி புறக்கணிக்கப்பட்டது. மரியாவின் தந்தை தம் குழந்தைகளுக்கு அறிவியலிலும் இசையிலும் ஆர்வத்தை ஊட்டியதோடு தாய் நாட்டுப் பற்றையும் தாய்மொழிப் பற்றையும் ஊட்டி வளர்த்தார்.

பள்ளிப் படிப்பில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்ற மரியா கல்லூரி படிப்பில் சேர்வதில் சிக்கல் ஏற்பட்டது. பிற்போக்கான ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த போலந்தில் பெண்கள், கல்லூரிக் கல்வி பெறுவது சிரமம் என்பதை உணர்ந்த மரியா, பிரான்சு சென்று பாரிசில் உள்ள சார்போன் பல்கலைக்கழகத்தில் படிக்க நினைத்தார். ஆனால், பொருளாதார நெருக்கடி அதற்கும் தடையாக அமைந்தது. தடைகளைக் கடந்து 1891-ல் மரியா என்பதன் பிரெஞ்சு சொல்லான மேரி என்ற பெயரில் சார்போன் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்ட வகுப்பில் சேர்ந்தார். 1893-ல் இயற்பியலிலும் 1894-ல் கணிதத்திலும் பட்டம் பெற்றார். உடன் ஆய்வுப் பணிகளில் இறங்கினார். முதலில் இரும்பின் காந்தப் பண்புகளைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். இந்தக் காலகட்டத்தில் பியரி கியூரி என்ற இளம் விஞ்ஞானியைச் சந்தித்தார். இருவரும் வாழ்க்கை இணையர் ஆகினர். 1895-ல் ராண்ட்ஜன், எக்ஸ் கதிர்களையும், 1896-ல் ஹென்றி பெக்குரல், பெக்குரல் கதிர்களையும் கண்டுபிடித்தனர். இதை அடுத்து, மேரியும் கதிர்களை வெளியிடும் புதிய வேதித்தனிமங்களைக் கண்டுபிடிப்பதில் இறங்கினார். இந்த முயற்சியில் பியரி கியூரியும் மேரியுடன் இணைந்தார். ஆய்வுக்கூட வசதி ஏதும் கிடைக்காத நிலையில் சார்போன் பல்கலைக்கழக பழைய சரக்கு அறை ஒன்றை ஆய்வுக்கூடமாக்கிக் கொண்டனர்.

பிட்ச் பிளண்ட் என்பது யுரேனியத்தின் ஒரு தாதுப்பொருள். இதில்தான் இவர்களது ஆராய்ச்சி. பெரிய பெரிய பிட்ச்பிளண்ட் பாறைகளை சிறிய கட்டிகளாக உடைத்து கரைத்து கொதிக்க வைக்க வேண்டும். கலக்கிக் கொண்டேயிருக்க வேண்டும். பிறகு மின் பகுப்புசெய்ய வேண்டும். இரவு பகல் பாராது இந்த ஆராய்ச்சி தொடர்ந்தது. முதலில் கதிர்வீசும் தனிமம் ஒன்றைக் கண்டுபிடித்தனர். அது யுரேனியத்தை விட அதிகமாக கதிர் வீசியது. தாய்நாடு நினைவாக அந்தத் தனிமத்துக்கு 'பொலோனியம்' என பெயர் சூட்டினார் மேரி கியூரி. இது குறித்த ஆய்வுக்கட்டுரையில்தான் முதன்முதலாகக் 'கதிரியக்கம்' (Radioactive) என்ற சொல்லை அறிமுகப்படுத்தினார். இப்போது மேரியும் பியரியும் தனித்தனியே ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். கதிரியக்க தனிமத் தேடலைத் தொடர்ந்த மேரி, அடுத்து யுரேனியம், பொலோனியம் ஆகியவற்றைவிட அதிக கதிர்வீசும் இன்னொரு தனிமத்தைக் கண்டுபிடித்தார். அதற்கு 'ரேடியம்' எனப் பெயரிட்டார்.

மேரி கியூரியின் கதிரியக்க ஆராய்ச்சிக்காக 1903-ல் பியரி கியூரி, ஹென்றி பெக்குரல் ஆகியோருடன் கூட்டாக இயற்பியலுக்கான நோபல் பரிசு தரப்பட்டது. நோபல் பரிசு பெற்ற முதல் பெண் ஆனார் மேரி கியூரி.

- தொடர் 16ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவம்

க.பொ.த. உயர்தரம்

# மாணவர் பக்கம்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

தொடர் XXVII

- நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**

ஒக்டோபர் - 2024

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 1 | 5) 4 | 9) 4 |
| 2) 4 | 6) 4 | 10) 2 |
| 3) 4 | 7) 1 | |
| 4) 3 | 8) 3 | |

**1. எதென்சில் பவுல் கற்போர் முன்னிலையில் போதனை ஆற்றிய இடம் எது?**

1. அரயோப்பாகு மன்றம் 2. ஜெருசலேம் சங்கம் 3. தொழுகைக்கூடம்
4. ஆற்றங்கரை 5. வீதியோரம்

**2. "அறியாத தெய்வத்திற்கு" என எழுதப்பட்டிருந்த பலிப்பீடம் எங்கு அமைந்திருந்தது?**

1. கொரிந்தில் 2. எபேசில் 3. கெங்கிரையில் 4. எதென்சில் 5. பிலிப்பியில்

**3. கெங்கிரேயாவில் பவுல் செய்தது என்ன?**

1. இயேசுவுக்காய் பல துன்பங்களை அனுபவித்தார்
2. விருத்தசேதனம் செய்து மக்களை மதம் மாற்றினார்
3. நேர்த்திக்கடனுக்காக தன் முடியை வெட்டிக்கொண்டார்
4. போதித்து அநேகரை மனம் மாற்றினார்
5. அக்கில்லா பிரிசில்லா வீட்டில் போதித்தார்

**4. ஆசியாவில் உரோமைய ஆட்சிக்குள்ளான தலைநகராக விளங்கியது எது?**

1. மிலேத்து 2. எபேசு 3. மாசிதோனியா 4. கொரிந்து 5. பார்ப்போ

**5. பவுல் யூதர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் நற்செய்தியை போதித்தும், விவாதித்தும் வந்த மன்றம் எது?**

1. திரன்னு மன்றம் 2. எபேசு சங்கம் 3. அரையோகுபாகு மன்றம்
4. எருசலேம் சங்கம் 5. தொழுகைக்கூடம்

**6. "தெமேத்திரியு" என்பவன் யார்?**

1. பவுலின் அன்புச்சீடன் 2. பவுலுக்கு புகலிடம் கொடுத்தவர்
3. வெள்ளி உருவம் செய்த கலைஞன் 4. பவுலுடன் பல பயணங்கள் சென்றவர்
5. பவுலால் விலக்கி வைக்கப்பட்டவர்

**7. தூய ஆவியின் வல்லமையால் மாசிதோனியாவில் பவுல் செய்த வல்லமையான புதுமை எது?**

1. அநேகரை மனம் மாற்றியது 2. யுத்திகு எனும் இளைஞனை உயிர்ப்பித்தது
3. பல வல்ல செயல்களைச் செய்தது 4. அனைவருடனும் இருந்தது
5. கலகத்தின் போது நம்பிக்கை இழந்தது

**8. செசாரியாவில் இடைக்கச்சையை எடுத்து தனது கைகளையும் கால்களையும் கட்டி, தூய ஆவியின் வழிகாட்டலுடன் பவுல் எருசலேமில் பிற இனத்தவரால் காட்டிக்கொடுக்கப்படுவார் எனத் தீர்க்கதரிசனம் செய்த இறைவாக்கினர் யார்?**

1. எசாயா 2. யோனா 3. ஆமோஸ் 4. அகபு 5. யோசுவா

**9. பவுலின் வாழ்விலிருந்து கிறிஸ்தவர்கள் தமதாக்கிக்கொள்ளக்கூடிய பண்புகளில் ஒன்று:**

1. அசமந்தப்போக்கு 2. விவாதம் 3. கம்பீரமான வாழ்வு
4. பிறருடனான ஒருமைப்பாடு 5. பிரமாணிக்கமற்ற தன்மை

**10. பவுலிடம் இருந்து கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் முன்மாதிரிகைகளுள் ஒன்று:**

1. உலக காரியங்களை விரும்பாதிருத்தல் 2. தனது கல்வியாற்றலைப் பயன்படுத்துதல்
3. யாருடைய உதவியுமின்றி செயற்படல் 4. பிறர் நலனில் பாராமுகமாய் இருத்தல்
5. தன் சுய விருப்பினை எப்போதும் நிறைவேற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.




# மதில் பூனை

"பாலாம்பிகையின் ஒண்டவிட்ட தமையன் பிரான்ஸ்ஸிலிருந்து வந்து நிற்கிறார். நான் போய்க் கதைச்சிட்டு வந்தன். நீங்களும் போய்ப் பார்த்து கதைச்சிட்டு வாங்கோ" மனைவி வந்து சொல்கிறாள்.

இப்போது பக்கத்துக் குவாட்டஸில் இருக்கும் பாலாம்பிகை, ஊரிலும் பக்கத்து ஊர் என்பதால் மற்றைய குவாட்டர்ஸ் நண்பர்களைவிட நாங்கள் அதிக நெருக்கம்.

அத்தோடு பாலாம்பிகை என் மனைவியோடு ஒரே பாடசாலையில் படித்ததும் எங்களுக்குள் நெருக்கம் அதிகமானதற்கு இன்னொரு காரணம்.

பின்னேரப் பொழுதுகளில் பாலாம்பிகையும் மனைவியும் அடிக்கடி கதைத்துக் கொள்வர்.

பாலாம்பிகைக்கு ஓர் அண்ணனும் அக்காவும் மட்டும் தான். அந்த அண்ணனை ஊரில் இருக்கும் காலத்திலேயே எனக்குத் தெரியும். அவன் என்னிலும் பார்க்க நான்கு வயது கூட என்பதாலும் நான் படித்த பாடசாலையில் அவன் படிக்காததாலும் பெரிய பழக்கமில்லை. ஆளைத் தெரியும் அவ்வளவே. ஆனால் பாலாம்பிகையின் உறவுகளை எனக்கு நன்றாகத் தெரியும். இது யாராயிருக்கும்...? சரி, எதற்கும் ஒரு முறை போய்ப் பார்த்திட்டு வருவம். முன்பும் ஒரு நாள் வெளிநாட்டிலிருந்து மாமா-மாமி வந்திருந்த போது நான் போய்ப் பார்த்து கதைக்கவில்லை என்று இப்போதும் பாலாம்பிகை சொல்லிக் குறைபடுவதும் நினைவில் வர, போகிறேன்.....

நான் போனபோது,

"வாங்கோ..." என்று பாலாம்பிகை வரவேற்கிறாள்.

"அண்ணா வந்திருப்பதாக மிஸ்ஸிஸ் சொன்னா..."

"ஓ... வந்திருக்கிறார். என்ரை பெரியம்மாவின் மகன். பிரான்ஸ்ஸில் இருக்கிறார். ஊருக்குப் போகும்போது வழியில் என்னையும் பிள்ளைகளையும் பார்த்திட்டுப் போவமென வந்திருக்கிறார்."

"அனேகமாக வெளியிலிருந்து வாறவர்கள் கொழும்பில பஸ் எடுத்து நேரே யாழ்ப்பாணம் போவார்கள். அதனாலை வவுனியாவில் இறங்கி வந்து பார்த்திட்டுப் போவது குறைவு" என் ஆதங்கத்தைக் கூறுகிறேன்.

"உண்மைதான். பஸ்ஸில் போவதென்றால் நேரே வீட்டுக்குப் போவதுதான் தவிப்பாயிருக்கும். இவர் வானொன்று பிடித்து வந்தவர்."

நானும் பாலாம்பிகையும் கதைத்துக் கொண்டிருக்க, "ஹலோ..." என்று கூறியபடி அவர் வந்தார். நானும் எழுந்து சிரித்துக்கொண்டு கை கொடுத்து குலுக்கிக்கொண்டேன்.

"இவர் யசோதரன்... எங்கடை ஊர்தான்" என்று சொல்லிக் கொண்டு,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இருங்கோ வாறன் ரீ போட்டுக்கொண்டு" என்று கூறியபடி பாலாம்பிகை எழுந்த போது,

"வேண்டாம் பாலா... இருங்கோ கதைப்பம்" என்று நான் சொல்ல,

"பரவாயில்லை... இப்ப அண்ணாவுக்கும் ரீ கொடுக்க வேண்டும்" என்றபடி பாலாம்பிகை போகிறாள்.

"நீங்க பிரான்ஸுக்குப் போய் எவ்வளவு காலம்?" சம்பிரதாயமாக விசாரிக்கிறேன்.

"பிரான்ஸுக்குப் போய் பத்து வருடங்கள் தான். அதற்கு முன் இந்தியாவில் ஆறு வருடங்கள் இருந்து பின் பிரான்ஸுக்கு போய் இருந்தேன். எல்லாமாக நாற்பது வருடங்களுக்கு மேலாகிறது."

"இப்ப தான் ஊருக்கு, ஐ மீன் சிறிலங்காவுக்கு வந்திருக்கிறீங்களோ?...."

"இல்லையில்லை .... முன்பும் ஒருக்கா வந்தனான். அப்ப பாலா கண்டியில் இருந்தவ. மற்றது வவுனியாவுக்கு இதுதான் பெஸ்ற் ரைம்"

பாலாம்பிகை இருவருக்கும் ரீ கொண்டு வந்து தருகிறாள்.

ரீயைக் குடித்துவிட்டு,
"ஓகே... உங்களைக் கண்டது சந்தோசம். எனக்கும் மனைவியின் தங்கை பிரான்ஸில்..."

"ஓ சொன்னவ. அவை தூரத்தில் இருக்கினம். வெள்ளென அவ வந்த நேரம் நீண்ட நேரம் கதைச்சனான்" என்று கூறுகிறார்.

நான் விடைபெற்றுக் கொண்டு வந்து விட்டேன்.

"என்னப்பா... சரியா பாலாம்பிகையின்ரை முகம்..."

"ஓ... பெரியம்மா, சின்னம்மாவின் பிள்ளைகள் என்றால் ஒற்றுமை இருக்கும்தானே."

"உங்களுக்கு உவரை முன்பே தெரியுமா...?"

என் ஊரவை என்றபடியால் மனைவி கேட்கிறாள். இல்லை அவரை என்று கேட்பதால் ஏதும் ... மனைவிக்கும் அந்த விடயம் தெரிந்ததால்தான் என்னையும் போய் சந்திக்க வைத்து... தெரிந்திருந்தால் நான் போக முன்பே ஏதாவது சொல்லி அனுப்பியிருப்பாள். தெரியாது என்று தான் நினைக்கிறேன்.

நீண்ட நேரம் யோசித்துப் பதிலளித்தார்...

"ஓ தெரியும் ...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ உங்கடை ஊர் என்றபடியால் நல்லாத் தெரிந்திருக்கும் தானே... ஆனால் தனியாத்தான் வந்திருக்கிறார்"

"ஓ தனியாய்த்தான் இருப்பார்... என நினைக்கிறேன்" என்று வாய் தடுமாறிச் சொல்லிவிட்டேன்.

"என்னப்பா... நான் என்ன சொல்றன். நீங்க என்ன சொல்றீங்க...?"

"ஓ... தனியாத்தான் வந்திருக்கிறார் என்று சொன்னீங்க..... நானும் அதைத்தான்..."

"இல்லையே... நீங்க தனியாய்த்தான் இருப்பார் என்று சொன்னனீங்க..."

"ஓமப்பா... சரி சரி அதை விடுங்கோ..." என்று கதையை மாற்றி,

"நானிப்ப ரவுணுக்குப் போறன். ஏதும் வாங்க வேணுமே" என்று கேட்கிறேன்.

"நீங்க எங்கையெண்டாலும் போங்கோ..... ஏன் தனியாய்த்தான் இருப்பார் என்று சொன்னனீங்க...?"

ஒருவேளை என்ரை ஊர் என்றபடியால் அவர் குடும்பத்தோட ஏதாவது பிரச்சினைப்பட்டு, அல்லது மனிசியை விட்டிட்டு ... அவ வேறு கலியாணம்... இப்படி ஏதாவது நினைத்து,... அதை அறிந்திட வேண்டுமென்று மனைவி அங்கலாய்ப்பது புரிகிறது. இனி, அதை அறியும் வரை விட மாட்டாள் ... என்ற அனுபவத்தில்,.....

"நீங்க படிக்கேக்குள்ள பாலாம்பிகையின் அக்கா ஒராள் வந்தது ஞாபகமிருக்கோ...?"

"ம்... அவ்வளவு ஞாபகமில்லை..." என்று மனைவி நாற்பது வருடங்களுக்கு முந்திய பாடசாலையை நினைவுக்குக் கொண்டு வர முயற்சிக்கிறாள்....

"நீங்க போய் வாற ஸ்கூல் சேவிஸ் பஸ்ஸில் தான் வாறவ... பார்க்கக் கொஞ்சம் வித்தியாசமாக இருப்பா..."

பாடசாலைப் பஸ்ஸில் பெண்கள் மட்டும் தான் போய் வரலாம். ஆரம்பப் பிரிவு ஆண் பிள்ளைகளும் ஏறலாம். அப்ப ஸ்கூல் சேவிஸ் என்று பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து... (அப்ப றைவரும் கொண்டக்டரும் பெண்களோ.. என்று கேட்டுக் கலாய்த்தவர்களும் உண்டு)

"ஓமப்பா... இப்ப ஞாபகத்திற்கு வருகிறது.... ஏழாம் வகுப்பிலேயே மெல்லிய மீசை, தாடி... கொஞ்சம் நிறம் குறைவாக... ஓ இப்ப ஞாபகம்..."

எங்களுக்குப் பக்கத்து ஊர்... சில பெரிய பொடியள் சாடைமாடையாகக் கதைப்பார்கள். உது ஒரு இரண்டும் கெட்டது... பின்னர் கொஞ்ச நாளைக்குப் பிறகு...

அவள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை. அவளுடைய வகுப்புப் பிள்ளைகள் இயல்பான வளர்ச்சியில் பூப்பெய்தி... கொண்டாட்டங்களும் கோலாகலமுமாக...

தன்னில் எதுவித மாற்றங்களும் இல்லாத நிலையை உணரும் வேளைகளில் தொடர்ந்து தன்னால் செயற்பட முடியாது என அவள் தனக்குள் கூனிக்குறுகினாள்.

பெற்றோருக்கும் புதிய சங்கடமான நிலைமையாகப் போக இடத்தை மாற்றுவது நல்லது என்று தோன்றியது.

இதற்கு முன் இது தொடர்பான எதுவித அனுபவங்களையும் அவர்களும் எதிர்நோக்காததால் கொழும்புக்கு உறவினர் வீட்டில் தங்குவதாக ஏற்பாடாகியது.

அவளாகவா ... அவனாகவா .... போவது என்ற சங்கடமான கேள்வி உருவான நிலையில்... தொடர்ந்து வாழப் போகும் வாழ்க்கைக்கு ஆணாக காட்டுவதே உசிதமாகத் தெரிந்தது. அந்தக் கணத்தில் எடுத்த தீர்மானம் தான்... கொழும்பு, இந்தியா, பிரான்ஸ் என எல்லா இடங்களிலும்...

இன்று அண்ணாவாக எல்லோருக்கும் தோன்றியவர் ..... எங்களுக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளமும் மகிழ்ச்சியும் மக்களின் அடிப்படைத் தேவைகளாகும்

## என்பதைப் புறக்கணிக்க முடியாது!

A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9வது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கு, நடைபெற்ற தேர்தலில் ஜனதா விமுர்த்தி பெரமுன (JVP) அதாவது மக்கள் விடுதலை முன்னணி என்ற பாரம்பரிய ஷோசலிசக் கட்சியின் பின்னணியிலிருந்து உருவான தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவரான அநுரகுமார திசாநாயக்க அவர்கள் 23.09.2024ல் ஜனாதிபதியாகப் பதவியேற்றமை இலங்கை அரசியல் வரலாற்றில் யாருமே எதிர்பார்த்திராத மிகப்பெரும் திருப்பமாகும்.

தேர்தல் தினத்திற்கு ஒருசில நாட்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதற்பக்கத்தில் காணக்கிடைத்த முக்கிய தொனிப்பொருளாக இருந்தவை,

* நாடு அநுரவோடு
* வளமான நாடு
* அழகான வாழ்க்கை என்ற வரிகளாகும்.

அவர்களது தொனிப்பொருளுக்கிசைவான எதிர்பார்ப்பைப்போல "நாடு அநுரவோடு" இணைந்தது. இதற்குமேலும் எஞ்சியிருப்பது, நாட்டை வளமாக்குவதும் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குவதும்தான். என்றும் இருந்தது போல இன்றும் கூட இது ஒரு முக்கிய தேவையாகவே உள்ளது. இந்நாட்டின் வளங்கள் மற்றும் வசதி வாய்ப்புகள், அவரவர் ஆற்றல்களுக்கும் தேவைக்குமேற்ப எல்லோருக்கும் பாராபட்சமின்றி கிடைப்பதற்கான நீதி மற்றும் நியாயத் தன்மை உறுதிப்படுத்தப்படுவதுடன் முறையற்ற, அளவுக்கு மிஞ்சிய, தனிப்பட்ட சொத்துக் குவிப்புகள், ஊழல்கள், பணமோசடிகள், அதிகார துஸ்பிரயோகங்கள் நிர்வாகச் சீர்கேடுகளால் நாட்டுக்கும், மக்களுக்கும் இழைக்கப்படும் தீங்குகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதும் தலையாய கடமை என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துகொண்டதனாலேயே "வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளை தமது தேர்தல் பிரகடனத்தில் உள்வாங்கியிருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் தமது அடிப்படைத் தேவைகளான உணவு, வாழிடம், வாழ்வாதாரம் (தொழில்) போன்றவற்றில் மிக மோசமான நிலையை அடைந்து, வளங்குன்றி, மகிழ்ச்சியிழந்து துன்பப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றபோது, ஆட்சியாளர்களுக்கெதிராக புரட்சிகள் செய்துள்ளமையை வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் நாம் கண்டுள்ளோம். இலங்கையில் 1971இல் நடைபெற்ற 'உள்நாட்டுப் புரட்சி', 'பிரான்சியப் புரட்சி', 1917ல் ரஷ்யாவில் நடைபெற்ற 'அக்டோபர் புரட்சி' என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும். 1917ல் ரஷ்யாவை ஆட்சி செய்த சர்வாதிகார மன்னனுக்கெதிராக அலெக்சாண்டர் ஷேரண்ஸ்கி தலைமையில் ஒரு போராட்டம் வெடித்தது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமக்கு உணவு, நிலம், சமாதானம் இம்மூன்றையும் வழங்குமாறு மன்னனிடம் கேட்டார்கள். ஆயினும் மக்கள் குரலுக்கு மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிசாய்க்காததினால், மக்கள் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். மன்னராட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. ஆயினும் ஆட்சியில் அமர்ந்த மக்கள் போராட்டத் தலைவன் மக்கள் தேவையை நிறைவேற்றவில்லை. இதனால் மீண்டும் புரட்சி வெடித்தது. இதைத் தொடர்ந்து 1917 அக்டோபரில் லெனின் தலைமையில் ஐக்கிய சோஷலிச சமவுடமைக் குடியரசு (USSR) எனும் மிகப்பெரும் சோஷலிச தேசம் மலர்ந்தது. இப்பலமான தேசம் 1985இல் ஜனாதிபதியாக வந்த மிக்காயேல் கொர்பச்சேவ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கிளாஸ்நோத், பெரஸ்ரொயிக்கா என்ற இரு பொருளாதார அரசியல் சீர்திருத்தங்கள் மூலம் முடிவுக்கு வந்ததுடன் USSR பல அரசுகளாக பிளவடைந்தது.

இது இவ்வாறிருக்க இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், அரசியல் நீரோட்டத்தில் பச்சை (UNP), நீலம் (SLFP) என்ற நிறங்களில் இரு பிரதான தேசிய கட்சிகள் களம் இறங்கி, ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி சுமார் 76 வருடங்கள் நாட்டைப் பிழையாக, தமது சுய நலன்களுக்காக ஆட்சி செய்தமையே இந்நாடு அரசியல், பொருளாதார, சமூக மற்றும் சர்வதேச ரீதியாக சிதைவடைய காரணமாகும் என்பதுடன் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும் வழிவகுத்தது என்பது பலரதும் அபிப்பிராயமாகும்.

இதைவிட 30 வருடங்கள் தொடர்ச்சியாக நடை பெற்ற அரசு - விடுதலைப் புலிகளுக்கிடை யிலான யுத்தம் நாட்டை மேலும் அழிவுப் பாதைக்குக் கொண்டுசென்றதுடன் இன்றைய பொருளாதார வங்குரோத்து நிலைக்கு நாட் டைப் படிப்படியாக நகர்த்திச் செல்ல ஏதுவாக அமைந்தது என்பதையும் யாரும் மறந்து விடலாகாது.

இத்தகைய இக்கட்டான நிலைமைகளில் "வளமான நாடு, மகிழ்ச்சியான வாழ்க்கை" என்ற இலக்கை மிகக் குறுகிய காலத்தில் அடைந்து கொள்வது கடினமானது. ஆட்சி யாளர்கள் மத்தியில் காலங்காலமாக பழகிப் போயுள்ள பிற்போக்குத்தனமான எண்ணங் கள், செயற்பாடுகள், படிப்படியாகக் களையப் படல் வேண்டும். நீண்டகாலமாக சகலரை யும் பாதித்துள்ள இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு எட்டப்படல் வேண்டும். நீதி, நியாயம், நேர்மை, நாட்டுணர்வு, கடமை யுணர்வு, கடின உழைப்பு மற்றும் உயரிய வாழ்க்கைத்தரம் கொண்ட நாடாக இந்நாட்டை மாற்றியமைப்பதற்கு மக்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் புதிய ஜனாதிபதி திசைகாட்டி முன்னோக்கிச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## மேரி கியூரி – தொடர்ச்சி .....

மேரியின் ஆய்வு வெற்றியின் மகிழ்ச்சி நீண்டநாள் நீடிக்கவில்லை. 1905-ம் ஆண்டு, சாலை விபத்து ஒன்றில் பியரி இறந்துபோக, மேரி மனம் உடைந்துபோனார். 1911-ம் ஆண்டு மீண்டும் மேரி கியூரிக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இந்த முறை பொலோனியம், ரேடியம் என்ற இரு புதிய கதிரியக்கத் தனிமங்களைக் கண்டுபிடித்ததற்காக வழங்கப்பட்டது. மேரி கியூரிக்கு இது ஊக்கமளிப் பதாக இருந்தது.

மேரி கியூரியின் முயற்சியால் கதிரியக்க ஆராய்ச்சிக்காக பாரிஸ் ரேடியம் கழகமும், வார்ஸா ரேடியம் கழகமும் உருவாயின. முதல் உலகப்போரில் ஏற்பட்ட உயிர் இழப்புகள் மேரி கியூரியை மிகவும் பாதித்தன. அவர், எக்ஸ்-ரே கருவிகளை உருவாக்கி அவற்றை ஊர்திகளில் நிறுவி போர்க்களத்திற்கே அனுப்பினார். தானே நேரில் சென்று பாதிக்கப்பட்ட வீரர்களுக்குச் சிகிச்சையும் அளித்தார். இந்த ஊர்திகள் 'லிட்டில் கியூரி'கள் என அழைக்கப்பட்டன.

மேரி - பியரி இணையருக்கு ஐரின், ஈவ் என இரண்டு மகள்கள். இதில் ஐரினும் பிற்காலத்தில் அறிவியலுக்கான நோபல் பரிசு வென்றார்.

மேரி கியூரி, தொடர்ந்து கதிரியக்க ஆராய்ச்சி யில் ஈடுபட்டதால் கதிரியக்க வீச்சால் கடுமையாக பாதிக்கப்பட்டார். இரத்தப் புற்றுநோய்க்கு ஆளானார்.

கற்பூரப் பெட்டகமாய் வாழ்ந்த அவர், 1934, ஜூலை 14 அன்று மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## "அணிலாடும் முன்றில்!"



■ ஆழியோன்

நல்ல கவிஞராகவும் வரவேற்புடைய எழுத்தாளராவும் போற்றப்படுகின்ற நா.முத்துக்குமார் எழுதிய "அணிலாடும் முன்றில்" என்ற அனுபவக் கட்டுரைத் தொகுப்பை வாசிக்கக் கிடைத்தது.

ஆனந்த விகடன் சஞ்சிகையில் தொடராக வந்த "அணிலாடும் முன்றில்" தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. முதற்பதிப்பு அக்டோபர் 2011 இல் வெளிவந்திருக்கின்றது. நான் வாசித்தது ஜூலை 2019 வெளிவந்த பதினைந்தாம் பதிப்பை.




கூட்டுக்குடும்பங்கள் முற்றிலும் சிதைந்துவரும் இன்றைய காலகட்டத்தில், கூட்டுக்குடும்பத்தில் காணப்படும் எல்லையில்லா ஆனந்தம் பற்றி இப்புத்தகம் வெளிப்படுத்துகின்றது.

அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாய்மாமன், அத்தை, சித்தப்பா, சித்தி என உறவுகளை தாங்கிநிற்கும் ஆணிவேர் - அன்பு

இந்த நூலை யாருக்கு அர்ப்பணித்துள்ளார் என்பதனை அழகான கவிதை நயத்திலே கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"என்னை உலகிற்கு அறிமுகபபடுத்திய அப்பா நாகராஜனுக்கும், நான் உலகிற்கு அறிமுகப்டுத்திய மகன் ஆதபன் நாகராஜக்கும் ......" என்று அர்ப்பணம் செய்துள்ளார். அம்மா, அப்பா... என்று தொடங்கி மகன் வரை இருபது கட்டுரைகளை வடித்துள்ளார்..

"எல் கே ஜி வகுப்பிற்கு எனக்குப் பிடிக்காத கீரைச்சாதத்தை நீ பள்ளிக்கு கட்டித்தர, சாயங்காலம் ஆனதும் சண்டை போடும் ஆவேசத்தில் வீட்டுக்கு வருகின்றேன். ஏன் இத்தனை கும்பல் நம் வீட்டில்? என் பிரிய அம்மா.... பாயில் படுக்கும் நீ பலகையில் படுத்திருந்தாய். உலகைப் பற்றிய உன் பார்வை மூடியிருந்தது அம்மா.... அப்போது என் பார்வை சோகத்தில் இருந்தது...."

எவ்வளவு உணர்வுபூர்வமான வசனங்கள்.... "புதைக்கப்படும் மகன்களை எல்லாம் விதைக்கின்ற விதைகளாய் எண்ணிக்கொண்டு இருக்கும் ஈழத்துத் தாய்மார்களிடமும் நான் காண்பது உன் முகம் தாயே?..."

அப்பா என்னும் கட்டுரையில்.... "தகப்பனுடைய நாட்குறிப்பில் 1975 ஜூலை 12ம் நாள் என்ன எழுதியுள்ளார் என்று பார்த்தேன். அன்று எனது பிறந்த தினம் ஒரேயொரு வரி எழுதியிருந்தீர்கள்.... "இன்று உலகின் இரண்டாவது அறிவாளி பிறந்தநாள்!".

'மகன்' என்ற தலைப்பிலான கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுதார்கள் .... உலகின் மிகப்பெரிய இன்பம் எது? தாய் மடியா? காதலியின் முத்தமா? மனைவியின் நெருக்கமா? கொட்டிக் கிடக்கும் செல்வமா? எதுவுமே இல்லை. "தம்மக்கள் மெய் தீண்டல் உயிருக்கு இன்பம்" என்கிறார் வள்ளுவர். நீ என் மெய்தீண்டினாய், மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன்...."

நா. முத்துக்குமார் அவர்கள் காஞ்சி பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியப் பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் திரைப்பாடல் ஆய்வுக்கான கலாநிதிப் பட்டமும் பெற்றவர்.

'தூசிகள்', 'பட்டாம்பூச்சி விற்பவன்', 'நியூட்டனின் மூன்றாம் விதி', 'குழந்தைகள் நிறைந்த வீடு', 'பச்சையப்பனில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்', 'கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம் மாநகரம்', 'கண் பேசும் வார்த்தைகள்', 'பாலகாண்டம்', 'ஆனா ஆவன்னா' போன்ற நூல்கள் வரவேற்புப் பெற்ற ஆக்கங்களாகும்.

இவரது கவிதைகள் ஆங்கிலம், மலையாளம், பிரஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன; சென்னை லொயோலா கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், இந்திராகாந்தி பல்கலைக்கழகம் என்பவற்றில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளன.

திரையிசைப் பாடல்களுக்காக இரண்டு முறை பிலிம் பேர் விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, சிறந்த பாடலாசிரியர் விருது, இசைஞானி அறக்கட்டளையின் இளம் சாதனையாளர் விருது என்று பல விருதுகள் பெற்ற இவர் இன்று நம்மிடையே இல்லை.

நம்முடைய ஊர்களில் கூட்டுக்குடும்பங்கள் உள்ளனவா? நெருக்கமான சொந்தங்கள் பெரிய வளவு ஒன்றில் அருகருகே வீடு கட்டி குடித்தனம் இருப்பது கிராமப்புறங்களில் இன்றும் காணப்படுகின்றது. கறிகள் பரிமாற்றம், பண்டிகை பட்சணங்கள் பரிமாற்றம் எல்லாம் நடைமுறையில் இருந்திருக்கின்றன. சில இடங்களில் இன்னும் உள்ளன. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை சுருக்கம் அடைய, தொழில் பொருட்டு இடம் பெயர்வுகள் ஏற்படும். குடும்ப உறவுகளிடையே கருத்து வேறுபாடுகள் பேதங்கள் ஏற்பட, கூட்டுக்குடும்பங்கள் கருக் குடும்பங்களாக மாறத்தொடங்கி நகரமய மாக்கல் கூட்டுக்குடும்பங்களை நொறுக்கி விட்டது. பின்னாளில் சிந்திக்கும்போது ஏக்கப் பெருமூச்சொன்று வருவது திண்ணம்.

இப்புத்தத்தை வாசித்தபின் வடிவாக ஒன்றை அவதானிக்க முடிந்தது. அண்மைக்காலமாக எமது முற்றங்கள் அதிலுள்ள மரங்களில் எல்லாம் அணில்களின் எண்ணிக்கை அதிரித்துக் காணப்படுகின்றன.

"அணிலாடும் முன்றில்" என்பதன் அர்த்தம் இன்னும் தெளிவாக விளங்குவது போல் ஓர் உணர்வு.



**அன்புடன் உங்களோடு .....**

.... தெளிவான தீர்மானங்கள் எடுத்து துணிந்து செயல்படுகிறார்கள். "வாழ்வது ஒரு முறை வாழ்த்தட்டும் தலைமுறை" என்ற மனப்பக்குவம் பெற்றவர்களாய், சரியான காரியங்களில் துணிச்சலுடன் இறங்குகின்றனர். சாவின் பயத்தை வெற்றி கொண்டவர்கள்தான் வாழ்வுப் புத்தகத்தை வாசிக்க ஆரம்பிக் கின்றனர்.

இ) இறப்பை பற்றிய சிந்தனை மற்ற மனிதர்களை மதிக்கவும் சமமானவர்களாகப் பாவிக்கவும் ஒருவரைத் தூண்டுகிறது. மனித வாழ்வை (Chess) விளையாட்டுக்கு ஒப்பிடலாம். விளையாட்டின்போது தான் (வாழ்க்கையின் போது தான்) அரசராக, அரசியாக, படைவீரராக, இருப்ப தெல்லாம் இருந்துவிட்டால் அனைவரும் ஒன்றாகத் தான் மூட்டை கட்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பில் எந்தவித வேறுபாடும் வித்தியாசமும் கிடையாது. வாழ்வின் பதவி, புகழ் முதலியவை நிலையற்றவை என்பதைச் சாவு நமக்கு தெளிவாக உணர்த்துகிறது. இதை உணர்ந்தவர்கள், இவற்றை யெல்லாம் தாண்டி மனிதர்களை மனிதர்களாகப் பார்க்க, மதிக்க கற்றுக்கொள்கின்றனர்.

இறப்பைப் பற்றிய சிந்தனை வாழ்வில் சரியான நெறி முறைகளை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது; வாழ்வின் நிலையாமையைச் சுட்டிக் காண்பித்து பணிவுடன் வாழத் தூண்டுகிறது; 'தான்தான்' எல்லாம் என்ற தான்தோன்றித்தனத்தைத் தகர்க்க அழைப்பு விடுக்கிறது.

எனவே இறப்பிற்குப் பின்புதான் ஒருவர் பேரின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று அவசியமில்லை. இறப்புப் பற்றிய சிந்தனைகளை தன்னுள் தாங்கி ஒரு மனிதர் தனது இன்றைய வாழ்வை சரிபடுத்திக்கொண்டார் என்றால் பேரின்ப வாழ்வை இங்கேயே அனுபவிக்க முடியும். எனவேதான் தன்னிடம் ஞானம் பெற வந்தவர்களில் ஒரு சிலரை, புத்தர் நடுகாட்டுக்கு அனுப்பி அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருக்கச் சொல்வாராம். காரணம் சாவைச் சந்திக்கத் திராணியுள்ள மனிதர்கள் வாழ்வைச் சந்திக்க தகுதியுள்ளவர்கள் என்பதே!


ஆசிரியர்

"குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவோர் பெற்றோர்களை விட பெருமதிப்புக்கு உரியவர்கள். பெற்றோர்கள் உயிர் மட்டுமே அளிக்கிறார்கள். ஆசிரியர்களோ நல்வாழ்வு வாழும் கலையைக் கற்றுத் தருகிறார்கள்!"

– அரிஸ்டோட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை



# கண்கெட்டபிறகு!

பைந்தமிழ்க்குமரன் ஜெ.டேவிட்

எல்லை வேலிக்கருகில் புழுதி பறந்த சண்டை. வரோணிக்காவும் செபமாலையும் மோதிக்கொள்கின்றனர். சூழலில் வாழ்பவர்களுக்கு ஓரே குஷி. தகரத்தின் ஓட்டைக்குள்ளால தவமணியின்ர தலை. கிடுகு வேலி விரிசலுக்குள்ளால கிளாக்கரும் மனிசியும். மதில் ஓரத்தில கதிரையப்போட்டு ஏறி மதிலுக்கு மேலால பிலோமினாவும் மருமகள் ஜசிந்தாவும். கொடி மல்லிப் பந்தலின் மறைவில் நின்றபடி அருள் மாஸ்ரரும் பெண்சாதி அமலோற்பவமும். இன்னம் மூலை முடுக்குகளுக்குள்ளால குசுகுசுத்தபடி சாடைமாடையும் நக்கல் சிரிப்புமாகப் பலபேர்...

ஆண்டவரே என்னமா எஞ்ஜோய் பண்ணுது இந்தச் சனங்கள் என்று எண்ணியபடியே ஏக்கத்துடன் பார்க்கிறார் மரியதாஸ்.

"வித்தாரக்கள்ளி விறகு வெட்டப் போனாளாம் கத்தாளி முள்ளு கொத்தோட குத்திடுச்சாம்' அடியே உன்ர மாய்மாலம் எனக்கிட்டப் பலிக்காது. உன்ர வாய உன்ர ஊட்டுல வெச்சிக்க. எனக்கிட்ட காட்ட வந்தியோ வாயக் கிழிச்சிப் போடுவன்..." இது வரோணிக்கா.

"என்ன... என்ன... என்னடி சொன்னா ... 'வித்தாரக் கொண்டையில தாழம் பூவாம் உள்ளுக்கிருக்குதாம் ஈரும் பேனும்' உன்ர ஊட்டு நாத்தம் ஊருக்கே தெரியுமேடி. நானென்னத்த புதிசா சொல்ல... பொத்திரி வாய ... கனக்க கதைச்சியெண்டா குட்டி நாய் வாயில பட்ட குரும்பட்டிபோல ஆக்கிப்போடுவன் ...." இது செபமாலை.

"ஓ..... ஓ எங்கடி வாடி பாப்பம் வா.. வா...வா ..."

"கூர மேல ஏறி கோழி புடிக்க ஏலாதவன், வானம் ஏறி வைகுண்டம் போனன் எண்டானாம். வாறண்டி இந்தா வாறன் ஒனக்கு விளக்குமாத்தாலதான் பூச கட்டுவன்...."

என்றபடியே கையில் ஈர்க்குக் கட்டையுடன் பாய்ந்தாள் வரோணிக்கா. பாவற் கொடிக்கு நட்டிருந்த மஞ்சவணாக் கம்பை பிடுங்கியபடியே எகிறினாள் செபமாலை.

"மாமி வேணாம் மாமி ..... விதானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் எண்டு அலைய வேண்டி வரும் .... வேணாம் மாமி வாங்கோ...” என்று மறிக்கிறாள் மருமகள் றெஜினா.

'அடைந்தால் மகா தேவி. அடையாவிட்டால் மரண தேவி' என்ற வீர வசனத்துடன் மோதிக் கொள்ளும் சினிமா சீன் மாதிரி வாய்ச் சண்டையில தொடங்கி வேலி உடைய குடுமிச் சண்டையாகி ரெண்டு பேரும் விழுந்து புரண்டு புழுதி பறந்தது. இடி மின்னலுடன் கூடிய சண்டைக்காட்சியைக் கச்சிதமாக செல்போனில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தாள் பிலோமினாவின் மருமகள்.

சண்டையை விலக்க போராடி தலைமயிர் கலைந்து கன்னத்தில் காயம் பட்ட கோலத்தில்,

“ஐயோ ஆராவது வந்து பாருங்கோ ரெண்டும் சாகப் போகுதுகள். புதினம் பாக்கிறீங்களே..? வாங்கோ....” என்று றெஜினா கத்துகிறாள். செபமாலையின் கையில் இருந்த மஞ்சவண்ணாத்தடி மூன்று துண்டுகளாக முறிந்து விழ வரோணிக்காவின் ஈர்க்குமாறு அவளின் தலையில் சரமாரியாய் விழுகிறது. வரோணிக்கா அடித்த அடியில் ஈர்க்குமாறும் முறிந்து விழ,

“ஐயோ அடிச்சிப்போட்டாளே...” என்று அழுதபடியே முகத்தைப் பொத்தியபடி முள்ளுக்கம்பியில் விழுகிறாள். முகத்தில் ஈர்க்குக் கீறல்களால் இரத்தம் கசிய ஒரு ஈர்க்கில் உடைந்து வலது கண்ணில் ஏறிநிற்கிறது. துடிக்கிறாள் செபமாலை. கூட்டம் கூடிவிட்டது.

பயந்து போனாள் வரோணிக்கா. என்ன செய்யலாம்? அவளுடைய மொஸாட் மூளை வேகமாக இயங்கியது. அமைச்சர்கள் எம்பிமார கைது செய்யவந்தா சட்டென்று நெஞ்சுவலி வருமே...

“அம்மா... அம்மா.... நெஞ்சு வலிக்குதே... வலிக்குதே.. ஐயோ...” கத்திப் புரண்டாள். சரிந்து அடிபடாமல் கவனமாக விழுந்தாள். சலசலப்புகள்.... இரண்டு பேரும் ஆஸ்பத்திரியில் .....

கண்ணில் பாய்ந்த ஈர்க்கிலை அகற்றி அவள் பார்வையைக் காப்பாற்ற ஒரு போராட்டம். மறுமுறம் வரோணிக்காவின் மகோன்னத நடிப்பில் அதிர்ந்துபோன ஆஸ்பத்திரி, ஐசீயு வில் ஒரு போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் பார்த்தபடியே உள்ளம் உடைந்து போனவராக சக்கர நாற்காலியில் மாமரத்தின் கீழ் அவள் கணவன் மரியதாஸ். காலடியில் அந்த நாய். நடந்தால் புல்லுக்கும் நோகாமல் நடக்கும் ஒரு புண்ணியவான். வரோணிக்காவுடன் வாழ்ந்த முப்பத்தைந்து வருட இல்லறம் பாரிசவாதம் வந்து கடைசி ஒரு வரிச சக்கர நாற்காலி வாழ்க்கை, அவரை ஒரு ஞானியாக்கி விட்டிருந்தது. இத்தனை கலவரங்களில் யாரும் அவரை கவனிக்கவேயில்லை. காவல்துறை விசாரணை நடக்கிறது. அவரிடமும் கேள்வி விழுகிறது.

“ஐயா எனக்குத் தெரிஞ்சி உப்புச் சப்பில்லாத சாதாரண விசயத்தில தொடங்கின சண்டை எங்க வந்து நிக்குது பாருங்கோ.... அந்தப்புள்ள பாரக்குட்டி மீன வெட்டி குடலையும் கழிவுகளையும் சொப்பின் வேக்கில போட்டு இந்த வளவுக்க எறிஞ்சதாம். ஆனா உண்மையில காகம் தூக்கிக்கொணந்து போட்டிருக்கும்போல. அது இவளுக்கு வெளங்காம கண்ட நிண்ட கதையெல்லாம் கதைச்சி கடைசியா பொண்புரசிகளா அடிபட்டு..... ச்சீ ... வேதனையா இரிக்கையா...” கூறி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியில் அவர் வளர்த்த நன்றியுள்ள அந்த நாய் அவர் முகத்தையே பார்த்தபடி குந்தியிருந்தது. காலையில் தொடங்கிய கலவரம் அனுமன் வாலானதால் அவருக்கும் அந்த ஜீவனுக்கும் பசி வயிற்றைப் பந்தாடியது.

ஆஸ்பத்திரியில் வரோணிக்காவின் நடிப்பு உறுதியாகிப்போக காவல்நிலையத்திற்கு கொண்டு போகப் பட்ட தகவலும், கூடவே கண்ணில் அறுவைச்சிகிச்சை செய்தும் ஒற்றைக்கண் பார்வையை செபமாலை இழந்த செய்தியும் காதில் எட்டியது. தன் மனைவிக்கு குறைந்தது ஆறுமாத கால சிறைத்தண்டனை கிடைக்கலாம் என்றும் பேசிக் கொள்கிறார்கள்.

வரேணிக்காவுக்கு இவற்றை கூறிய பெண் பொலிஸ், அவளது முட்டாள் தனத்தை சுட்டிக்காட்டி திட்டியபடியே செல்கிறாள்.

பாணும் சம்பலும், தண்ணீர்ப் போத்த லும் அவளது ரெண்டு சட்டைகளும் கொண்டு, காவல் அலுவலக முற்றத்தைக் கடந்து வாசலில் சக்கர நாற்காலியில் கணவனும் அதை தள்ளியபடியே வரும் நாயையும் அவள் காண்கிறாள். அவளது தவறுகள் ஒவ்வொன்றாகக் கண்முன் வருகிறது. கண்கள் கண்ணீரைச் சொரிய தலையிலடித்தபடியே அழுகிறாள் ...




"என்னுடைய குழந்தைப் பருவம் மகிழ்ச்சியாகதான் அமைந்திருந்தது. ஆனால் எங்கள் பெற்றோர் விவாகரத்துப் பெற்றுக் கொண்டதன் காரணமாக நானும், என் சகோதரனும் பல்வேறு கேலிகளுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளானோம். என் அம்மா மறுமணம் செய்து கொண்ட பிறகு, பள்ளியில் உள்ள சக மாணவர்கள், நண்பர்கள் அனைவரும் எங்களைப் பற்றி மோசமாகப் பேசத் தொடங்கினார்கள். அது எங்களுக்கு மிகப் பெரிய வருத்தத்தை அளித்தது. ஆனால் எங்களுடைய பாட்டி எங்களை நன்றாக வளர்த்தார். எந்தச் சூழலில் வாழ்ந்தாலும், கண்ணியத்துடன் எப்படி வாழ வேண்டும் என கற்றுக் கொடுத்தார்" – ரத்தன் டாடா

---

**டாடா** நிறுவனம், சொத்துகள் அனைத்தையும் ட்ரஸ்டுகளின் வழியே கல்வி, சமூகம், கலை என முழுமையாக இந்த சமூகத்திற்கே திருப்பியளிக்கும் ஒரு முன்மாதிரி நிறுவனம்.
ரத்தன் டாடா புதிய பரிசோதனைகளை செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்: இளைஞர்களை, கண்டுபிடிப்பாளர்களை, விஞ்ஞானிகளை, ஆய்வாளர்களை எப்பொழுதும் தன் உடன் வைத்திருந்தவர்.

எளியவர் வீட்டிலும் கார் இருக்க வேண்டும்: மிக குறைந்த விலையில், உரிய பாதுகாப்புடன் நாம் கார் உருவாக்க வேண்டும்" என்று ஒருநாள் கார் உற்பத்தியாளர்கள் முன்னிலையில் ரத்தன் டாடா அவர்கள் பேசிய போது ஒட்டுமொத்த கூட்டமும் அவரைப் பார்த்து சிரித்தது. "மிக குறைந்த விலையில் எளியவர்களுக்கு பொம்மை கார் செய்து கொடுக்கலாம்" என்று ஏளனம் செய்தார்கள்.
அடுத்த ஒரு வருடத்தில் ஒரு இலட்சம் ரூபாய் விலையில் "டாடா நானோ" என்ற ஒரு காரை இந்தியா முழுதும் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டு வந்தார். இலாபத்தில் மட்டுமே குறியாக அவர் இருக்கவில்லை. மாறாக எளியவர்கள் மனதில் தனது நிறுவனத்தின் பெயரை நிறுத்தியவர்.
எண்ணிலடங்கா அறக்கட்டளை மூலம் இந்தியா முழுதும் ஏழைகளை வாழ வைத்தவர். இந்தியாவில் எங்கு இயற்க்கை இடர்பாடு வந்தாலும், முதல் நிதியுதவி டாடா குழுமத்தில் இருந்து தான் வரும்.
கோரோனா தொற்று இந்திய நாட்டையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தபோது இந்த நெருக்கடிகளை உணர்ந்ததும் 1500 கோடிகளை முதல் தவணையாக அரசுக்குக் கொடுத்தவர். தன்னுடைய நிறுவனத்தில் பணிபுரியும் அத்தனை பணியாளர்களுக்கும் 'அன்பளிப்பு' என்ற பெயரில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விட்டவர். இவர் அன்பு செலுத்தாத உயிர் என்று உலகில் எதுவுமே இல்லை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநலப் பாதிப்புகள்



■ J. பிரான்சிஸ் சேவியர்
நெல்சன் MAC, MSW, PhD,
இயக்குனர், போதை நோய் நலப்பணி, நாகர்கோவில்.

– சென்ற இதழ்த் தொடர்ச்சி .....

**10. மனநல மருத்துவ வரலாறு ஒரு பார்வை**

மனநல மருத்துவ வரலாற்றை ஆய்ந்து பார்க்கும் போது ஒரு பரிணாம வளர்ச்சியைப் பார்க்கிறோம். அறிவியல் காலத்திற்கு முன் (கற்காலத்தில்) ஆவியுலகக் கோட்பாட்டின் மனப் பிரச்சினைகள் ஆவியின் சக்தியால் ஏற்படுவதால் மனநலம் குன்றியவர்கள் மந்திரம், பூஜை, சடங்கு முதலியவற்றின் மூலம் ஆவியைத் (கடவுளை) திருப்திப்படுத்தி நோயினின்று நலம் பெறலாம் என்று நம்பினர். இதற்கு பின்பு எழுந்த இயற்கைக் கோட்பாட்டின்படி (கி.மு 460-300) உடலைப் போலவே மனதிற்கும் பலவிதங்களில் பாதிப்புகள் ஏற்படுவதாகவும், மனநோய்களுக்கு ஆவியின் சக்திக்கும் (கடவுளுக்கும்) எந்தவிதத் தொடர்புமில்லை என்றும் தெளிவாக்கப்பட்டது.

மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் கிரேக்க அறிஞர் கிப்போகிரேட்டஸ் (Hippocrate) என்பவரே “மனநோய்க்கும் உடல்நோயைப் போலவே மருத்துவம் செய்ய வேண்டும்” என்று முதலில் எடுத்துக்கூறியவர். அவருக்குப் பின்பு வந்த கிரேக்க அறிஞர் பிளேட்டோ (Plato) “மனதிற்கு மருத்துவம் பார்க்க முயலாமல் உடலுக்கு மட்டும் மருத்துவம் பார்ப்பது பெரும் தவறு. உடலும் மனமும் இணைபிரியாதவையாதலால், இணைந்தே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்” என்று அன்றே சொல்லி வைத்தார். அவரைத்தொடர்ந்து வந்த கிரேக்க தத்துவ ஞானியும் உரோமாபுரியின் மருத்துவருமான கேலன் (Gelen) நரம்பு மண்டலத்தை ஆய்வு செய்ததன் மூலம் மனநலச் சிகிச்சையை உருவாக்கினார். இந்திய நாட்டில் அகத்திய முனிவர் தனது கிரியை நூலில் இன்று தெளிவாக விளக்கப்படும் மனநோய்களைப் பற்றி அன்றே தெளிவாக எழுதி வைத்துள்ளார்.

இதற்கு அடுத்ததாக வந்த இடைக்காலம் (கி.மு 300-1400) மீண்டும் ஆவியுலகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதோடு, இயற்கை கோட்பாட்டை கைவிட்டது. ஐரோப்பிய நாகரீகத்தின் இருண்டகாலம் என்று இது வர்ணிக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் மனநோயாளிகளை “பேய் பிடித்தவர்கள்” என்று சொல்லி வன்செயல்களாகிய கசையாலடித்தல், கழுவேற்றுதல், நெருப்பிலிடுதல், காயப்படுத்துதல், இருட்டறையில் தள்ளுதல், மண்டையில் துளைபோடுதல், குளிர்ந்த நீரைக் கொட்டுதல், விலங்கு மாட்டுதல், பூட்டி வைத்தல், இயந்திரத்தில் வைத்து சுற்றுதல், திமிங்கலத்தின் தோலால் அடித்தல், சுண்ணாம்புக் காள்வாயில் போடுதல், மூச்சை அடைத்து வைத்தல், தலை கீழாகத் தொங்கவிடுதல். தலையை வெட்டி விடுதல் என்று இம்சைகளின் வரிசை நீண்டு கொண்டே போகின்றது. இதற்குச் சான்றாக இருக்கும் வரலாறு மறுக்க முடியாத, மறைக்க முடியாத, மறக்க முடியாத நிகழ்வுதான் 1431இல் ஜோன் ஆப் ஆர்க் பிரான்சில் உயிருடன் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்ட காட்சி.

இதனைத் தொடர்ந்து வந்த நவீனகாலத்தில் (1400-1945), அறிவியல் புரட்சி மீண்டும் ஏற்படத் தொடங்கியது. மனதில் ஏற்படும் பாதிப்புகள் விளைவிக்கும் மாற்றங்களே மனநோய்க்குக் காரணம் என்பது அறிவியல் வளர்ச்சியின் பயனாகத் தெளிவாகியது. மனநோயாளிகளுக்கெனவே முதன்முறையாக ஸ்பெயின் நாட்டில் 1409ஆம் ஆண்டு சிறப்பு மருத்துவமனை உருவாக்கப்பட்டது. விரைவில் உலகின் பல



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் சிறப்பு மருத்துவமனைகள் ஆரம்பிக் கப்பட்டன. 1744 இல் மனநலப் பாதுகாப்புச் சட்டம் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. பிரான்சில் இருட்டறைகளில் சங்கிலிகளால் கட்டப் பட்டிருந்த மனநோயாளிகளை பிலிப் பினல் (Philppe Pinal) என்பவர் 1773இல் பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் விடுவித்து, தேவையான மனநலச் சிகிச்சை அளித்தார். அமெரிக்காவில் 1943இல் சிறைக்கூடங்களில் மனிதாபிமானமின்றி மிகவும் கொடுமைகளுக்கு உள்ளானவர்களைச் சிகிச்சைக்காக வெளியே கொண்டு வந்தவர் டாரதி டிக்ஸ் (Dorothy Dix) ஆவார். மனநோயால் பீடிக்கப்பட்டு, பலவிதமான கஸ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்த கிளிபோர்டு பியர்ஸ் (Clifford Pears) அமெரிக்காவில் மனநோயாளர்களின் அவல நிலையை 1908இல் "தன்னையே அறிந்த மனம்" (The mind that found itself) என்ற தனது நூலில் வெளிப்படுத்தி, பரவலாயிருந்த குறைபாடு களையும் சீர்படுத்துவதற்கான வழிமுறைகளையும் எடுத்துக்கூறினார். அத்தோடு தேசிய மனநல இயக்கத்தையும் ஆரம்பித்ததோடல்லாமல் அமெரிக்காவில் முதல் வெளிநோயாளி மனநல மருத்துவச் சிகிச்சை மையத்தையும் ஏற்படுத்தினார்.

மனநல ஆய்வின் தந்தை சிக்மெண்ட் பிராய்டு (Sigmund Frued) ஆழ்மனதில் அடக்கி வைத்தி ருக்கும் கசப்பான அனுபவங்கள், நிறைவேறாத ஆசை, நிகழ்வுகள் ஏற்படுத்தும் மனஉணர்வுக் கோளாறுகளை நலப்படுத்தும் முறையை 1880இல் ஆஸ்திரியாவில் உருவாக்கினார். மனநலம் பெற வருபவரை மையப்படுத்திச் சிகிச்சை முறையை (Client centred therapy) 1902இல் கார்ல் ரோஜர்ஸ் (Carl Rogers) அமெரிக்காவில் அறிமுகப்படுத்தி னார். மனநலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும், அடைவதற்கான நுட்பங்க ளையும் 1960இல் ராபர்ட் கார்க்கப் (Robert Carkhuff) அமெரிக்காவில் எடுத்துரைத்தார். இக் காலகட்டத்தில் சமூக மனநல மருத்துவம் (Social Psychiatry) என்ற மக்கள் மைய மனநலம் (People centred mental health) என்ற கருத்தை அடால்ப் மேயர் (Adolf Meyer) அமெரிக்காவில் அறிமுகப் படுத்தினார். இப்படி மனநோயைப் பற்றிய விழிப்புணர்வும், மனநலச்சிகிச்சை வாய்ப்பும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா என்று உலகெங்கும் பரவத் துவங்கியது. 20ம் நூற்றாண்டில்தான் உலக நல அமைப்பு (WHO) உடல்நலம், மனநலம், சமுதாயநலம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்திருப்பதையே முழுநலம் என்று முழக்கமிட்டு அறிவிக்கின்றது.

இப்படி சாதாரண மனநலப்பிரச்சனை தொடங்கி தீவிரமான மனநோய் என்று எல்லாப் பாதிப்புகளும் தகுந்த உதவி வழங்குமளவில் இன்று மனநல மருத்தவம் வளர்ந்து உயர்ந்து சிறந்து நிற்கிறது. "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்று திருவள்ளுவர் சொல்லுவதிலிருந்து மனதின் செயல்பாட்டில் சமச்சீர் நிலை எவ்வளவு முக்கியம் என்பதை நன்கு உணர முடியும். இன்று மனநல வழிநடத்துனர்கள் சிறந்த மனநல மருத்துவ ரின் ஆலோசனைப்படி பிற மனநல வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி மனநோயாளியின் குடும்பத்தின ரையும் இணைத்து மனநோய் தடுப்பு சிகிச்சை, பராமரிப்பு இவற்றை மிகச் சிறப்பாக செய்கின்றனர்.

**மனநலப் பாதிப்புகள்:** மிதம் முதல் தீவிரம் வரை

பொதுவாக மனநலப் பாதிப்பின் வெளிப் பாடாக இருக்கும் மனநோயின் தாக்கம் ஆரம்பத் தில் மிதமாகத்தான் இருக்கும். மிதமான மனநோயை மனநல மருத்துவத்தால் முற்றிலுமாகத் குணப்படுத்தலாம். ஆனால் தீவிர மனநோயை மனநல மருத்துவத்தாலும் முழுமையாகக் குணப் படுத்த முடியாது. சர்க்கரை நோய், மதுநோய் போல தீவிர மனநோயை மனநல மருத்துவத்தின் மூலம் அதன் தீவிரத்தன்மையைக் குறைக்கச் செய்யமுடியுமே தவிர பூரணமாகக் குணப்படுத்தி விட முடியாது.

**மிதமான மனநலப்பாதிப்புக்கள்**

மிதமான மனநலப்பாதிப்புகளை "நியுரோசிஸ்" (Neurosis) என்று கூறலாம். சாதாரண மனநோய் அல்லது மனநோயின் ஆரம்பநிலை என்றும் அழைக்கலாம். பதற்றநோய், பேரச்சநோய், மிகை உணர்ச்சிநோய் என்பவை மிதமான மனநோய் வகையைச் சேர்ந்தவை. எந்த செயலுக்கும் தேவையற்ற மனஉளைச்சலும் மன அழுத்தமும் ஏற்படுத்துவதைப் பதற்றநோய் என்கிறோம். எதையும் செயல்பட முடியாத படி பயந்து ஒதுங்கு வதைப் பேரச்சநோய் என்கிறோம். எதிலும் மனசஞ்சலத்துடன் அளவுக்கு அதிகமாக உணர்ச் சிகளை வெளிப்படுத்துவதை மிகை உணர்ச்சி நோய் என்கிறோம்.

- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல்

## பொதுத் தேர்தல் நம் கடமை

- குடிமகன்

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. நீங்கள் எல்லாம் வாக்களிக்கத் தயாராக இருப்பீர்கள். கண்டிப்பாய் உங்கள் மனசாட்சிப்படி வாக்களியுங்கள்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி 'அநுர சுனாமி' எல்லாவற்றையும் அடித்து அள்ளி வெற்றி பெற்றது. இச் சுனாமி பாராளுமன்ற தேர்தலிலும் ஆட்சி செலுத்தும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது சில தள்ளாட்டங்கள் காணப் படுகின்றன.

பொருட்களின் விலை அதிகரிப்பு: குறிப்பாக முட்டை விலை அதிகரிப்பு, பருப்பு வகைகளின் வரி அதிகரிப்பு. இவை அடிமட்ட மக்களின் அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் - என்பன மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளன.

'சுவிட்ச்' போட்டவுடன் வெளிச்சம் வருவது போல் உடனடியாக ஊழல்வாதிகள் கூட்டுக்குள் போடப்படுவார்கள் என்று மக்கள் மனதில் படிந்து விட்டது. ஆனால் அப்படி நடக்கவில்லை. என்பது மக்களுக்கு ஏமாற்றம்தான். எதற்கும் ஒருபடிமுறை செயற்பாடுகள் உண்டுதான்: ஆனால், தேர்தல் பரப்புரையில் அப்படிச் சொல்லப்படவில்லை: எல்லாம் உடன் நடக்கும் என்றுதான் சொன்னார்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட உடன்பாடுகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னார்கள்: அப்படியொன்றும் நடந்ததா கத் தெரியவில்லை.

ஜெனீவா தீர்மானத்தின் நிராகரிப்பு, தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவல் அவசியமில்லை என்ற ஜே.வி.பி யின் கூற்று எல்லாம் தமிழ் மக்கள் மனதிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் எதிரான எண்ண அலைகளினைத் தோற்றுவித்து விட்டன.

இதற்கிடையில் மலையகம், வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில் கடைசிநேரம் கட்சிமாறி ரணிலோடு இணைந்திருந்த தமிழ்பேசும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேட்புமனுச் செய்வ தற்கு கட்சியில்லாமல் தொங்கித் திரிந்தார்கள். 'வடிவேலன்' மக்கள் சேவைக்காக புதுக்கட்சியில் இணைந்துள்ளாராம். பேரினத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தோற்றுவிடுவோம் என்று தெரிந்து ஒதுங்கிக்கொண்டார்கள். அதேநேரம் பாடுமீன் பகுதியில் ஒதுங்கவும் வெட்கம், வெற்றி யும் கிட்டாது என்பதனால் வேட்புமனுவை செல்லு படியற்றதாகும்படி நிரப்பி தப்பிக்கொண்டார்கள் என்று 'போடியார்' சொல்கின்றார்...... நமக்கு இதுபற்றித் தெரியாது.

நமது பகுதிகளில் பொதுத்தேர்தல் வேட்பாளர் கள் என்று பலர் அள்ளித் தெறிக்கவிடப்பட்டுள் ளார்கள்: மாற்றம் வேண்டுமென்று கூறிக்கொண்டு, பழைய சரித்திரம் தெரியாத வேட்பாளர்கள் - இளையவர்கள் - இறக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதித் தேர்தல் வேறு என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி இவர்கள் சிந்திக்க வேண்டும். எத்தனைமுறை ஏமாற்றப்பட்டு விட்டோம். சிலர், பிரபல்யம் வேண்டுமென்பதற்காக தேர்தலில் இறங்குகிறார்களோ தெரியாது.

மன்னார் ஆயர், பொதுத் தேர்தல் தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அவற்றில் இருந்து சில பகுதிகள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடிவந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.... ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வருகின்ற இந்த நாடாளுமன்ற தேர்தலானது இலங்கை முழுவதும் - குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியான தமிழர் தாயகப் பகுதியிலும் - பலத்த எதிர்பார்ப்புகள் நிறைந்த தேர்தலாக அமைந்துள்ளது.

உரிமை மறுப்புக்கு இலக்கான மக்களாகிய நாம், நமது அனைத்துவகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல் தான்.

இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் இதன் கனதியை உணர்ந்தவர்களா என்பது கேள்விக்குறியே! அதேவேளையில் என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொதுமக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்பதனையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொள்ள வேண்டும்.

30 வருட அகிம்சை போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.... நாம் இதுவரைகாலமும் போராடிவந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

தமிழர்களாகிய நாம், நமது சுயநிர்ணய உரிமை உட்பட கால காலமாக நாம் வலியுறுத்தி வருகின்ற தமிழ்மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளை தொடர்ந்து முன்னகர்த்திச் செல்லக்கூடியவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

உறவினர், ஊரவர், நண்பர் போன்ற வட்டங்களைக் கடந்து செயற்படக்கூடிய தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய இலஞ்ச ஊழலற்ற செயற்திறன் வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

மாறிவரும் அரசியல், பொருளாதார சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்தல் தொடர்பான சமகால அரசியல் தொடர்பான நமது பார்வையிலும், கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நமக்குத் தரக்கூடிய ஒரு தீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் நமது வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்துவோமாக. நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுவோமாக!

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெணான்டோ ஆண்டகை தேர்தல் தொடர்பான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




இங்கிலாந்து மன்னர் சார்லஸ், ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். ஒக்டோபர் 21 அன்று அந்நாட்டின் நாடாளு மன்றத்திற்கு சென்று உரையாற்றினார். அவர் பேசி முடித்ததும், செனட் சபையின் பெண் உறுப்பினரான லிடியா தோர்ப், காலனித்துவ ஒழிப்புக்கான கோஷங்களை எழுப்பினார். அவையில் இருந்தவர்களின் கவனம் தன்னை நோக்கித் திரும்பும்படி மாற்றினார். அவர் ஆவேசத்துடன் மன்னர் சார்லசை நோக்கி, "எங்களுடைய நிலம் எங்களுக்கு வேண்டும். அதனை திருப்பி கொடுங்கள். எங்களிடம் இருந்து திருடியவற்றை எங்களிடமே திருப்பி தாருங்கள்" என சத்தம் போட்டார். "இது உங்களுடைய பூமி அல்ல. நீங்கள் என்னுடைய அரசரும் அல்ல.." என குறிப்பிட்ட அவர், ஆஸ்திரேலியாவின் உள்ளூர்வாசிகளை ஐரோப்பிய குடியேறிகள் இனப்படுகொலை செய்துவிட்டனர் என கடுமையாக பேசினார். மன்னர் சார்லசின் முன் அவர் இப்படி பேசியதும் சுற்றியிருந்தவர்கள் ஆச்சரியத்துடன் அவரை பார்த்தனர். ஆஸ்திரேலியா, 100 நாடுகளுக்கும் மேலாக இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. அப்போது, ஆயிரக்கணக்கான ஆஸ்திரேலிய பழங்குடியின மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒட்டுமொத்த சமூகமும் புலம்பெயர்ந்து சென்றனர். 1901-ம் ஆண்டு அந்நாடு சுதந்திரமடைந்தபோதும், ஒருபோதும் முழு அளவில் குடியரசு நாடாக மாறவில்லை. அதன் தலைவராக மன்னர் சார்லஸ் நீடித்து வருகிறார். • *தினத்தந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி இலக்கம் - 57

*முதலில் வரும் ஐந்து வினாக்களும் செக்கரியா:1-14 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

1) நாரையின் இறக்கைகள் போல் இறக்கைகளுடைய இரண்டு பெண்கள் "மரக்காலை" எங்கே, எதற்காக கொண்டு சென்றார்கள்? ..............................................................................................................................................................................................................................

2) எருசலேமுக்கு எதிராக போர்தொடுத்த எல்லா மக்களினங்களையும் வதைக்கும் பொருட்டு ஆண்டவர் அனுப்பிய கொள்ளை நோய்கள் எவை? ..............................................................................................................................................................................................................................

3) நான்கு கொம்புகளைப் பற்றியும், நான்கு கொல்லர்கள் பற்றியும் ஆண்டவரின் தூதர் கூறிய விளக்கம் என்ன? ..............................................................................................................................................................................................................................

4) விளக்குத்தண்டின் அருகில் வலப்புறமும் இடப்புறமும் உள்ள இரு ஒலிவ மரங்களும் எதனைக் குறிக்கின்றன? ..............................................................................................................................

5) செக்கரியா நூலின் முதற்பகுதியில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்ட விடயங்கள் எவை? ..............................................................................................................................

6) தூயபவுல் பெருங்கோவிலில் புனித கதவில் யூபிலிக்கான மூன்று ஆண்டு தயாரிப்புகள் பொறிக்கப் பட்டுள்ளன. அவை எவை? ..............................................................................................................................

7) "அப்போலோஜியா" என்னும் கிரேக்க சொல்லின் பொருள் யாது? ...............................................

8) உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து சிறப்பு நிறுவனங்களும் எவை? ..............................................................................................................................................................................................................................

9) போஸே கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் தலைவர் யார்? ...............................................

10) சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள. அவற்றில் 4 உரிகைளைக் குறிப்பிடுக? ..............................................................................................................................

பெயர் : ...............................................

முகவரி : ...............................................
...............................................

பங்கு : ...............................................

தொ.பே.இல: ...............................................

அனுப்பவேண்டிய முகவரி :
**வினாவிடைப் போட்டி - 57**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 30.11.2024

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருஅவைச் செய்திகள்!

## கடவுளின் மகிழ்ச்சியை வெளிக்காட்டும் அழகிய செயல்களைச் செய்வோம்

உலக மறைபரப்பு தினமான அக்டோபர் 20 ஞாயிறன்று "கேட்கச் செவி உடையோர் திரு அவைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும் (திருவெளிப்பாடு 2:29)" என்ற கருப்பொருளில் இணையவழி மறைப்பணி ஆற்றுவோர்களுக்கான கூட்டமானது வத்திக்கான் தூய பேதுரு பெருங் கோவிலில் உள்ள கிளமெண்டைன் சிற்றாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பீடத் தகவல் தொடர்புத் துறையின் தலைவர் முனைவர் Paolo Ruffini, பேரருள்திரு அருள்பணி. Lucio Ruiz, ஆயர் மாமன்றத்தின் துணைச் செயலர் பேரருள்திரு Luis Marín de San Martín ஆகியோர் கலந்து கொண்டனர். மறைப்பணியாளர்கள் மற்றும் கத்தோலிக்க இணையவழி தாக்கத்தை ஏற்படுத்துபவர்கள் (Catholic Digital Influencers) ஆகியோருக்கான யூபிலி, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28, 29 ஆகிய நாள்களில் நடைபெறும் என்று அறிவித்தார் பேரருள் திரு Lucio Ruiz. டிஜிட்டல் முறையில் ஆயர் மாமன்றம் மேற்கொண்ட பணிகளையும் அதன் செவிமடுக்கும் செயல்முறைகளையும் பாராட்டிய பேரருள்திரு Ruiz அவர்கள், திருஅவை உங்களுக்குச் செவிமடுக்கிறது, டிஜிட்டல் தளத்தில் மேற்கொள்ளும் பணி தொடர்ந்து ஒன்றிப்பால் வழிநடத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். நமதாண்டவர் இயேசு டிஜிட்டல் அடையாளம் அல்ல: அவர் வாழும் மனிதர் என்று வலியுறுத்திய ஆயர் Luis Marín அவர்கள், அனைவரையும் விருந்துக்கு அழைத்து வாருங்கள் என்னும் உலக மறைபரப்பு தினத்தின் கருப்பொருளைக் கருத்தில் கொண்டு அனைவரும் அவரவர் பாதுகாப்பு எல்லைகளை கைவிட்டு, கிறிஸ்தவ மகிழ்ச்சிக்கு சான்று பகர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

## போர்நிறுத்தம் அவசியம்

அக்டோபர் 17 வியாழனன்று வெளியிடப்பட்ட தகவல்களின்படி, கடந்த மூன்று வாரங்களில் 100 குழந்தைகள் கொல்லப்பட்டனர் 800 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று எடுத்துரைத்துள்ள யுனிசெஃப் துணை இயக்குநர் Ted Chaiban அவர்கள், மோதலில் ஈடுபடும் அனைத்து தரப்பினரும் பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தைக் கடைபிடிப்பது மிக அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மோதலில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரும் பொது மக்கள் மற்றும் குடிமக்களின் உள்கட்டமைப்புகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும், வீடுகள், நலவாழ்வு மையங்கள், பள்ளிகள் மற்றும் தங்குமிடங்கள் மீதான தாக்குதல்கள் ஏராளமான உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

அடிப்படைத் தேவைகளான நீர், நலவாழ்வு, சாலைகள், பாலங்கள், மின்சார வசதிகள் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புகளை வழங்கும் குடிமக்களின் வசதிகளை மதித்து பாதுகாக்க வேண்டும் என்று எடுத்துரைத்துள்ள அவர், போரினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகளை வழங்குவதில் மிக துரிதமாக செயல்பட வேண்டும் என்றும் பன்னாட்டு சமூகத்திற்கு அழைப்புவிடுத்துள்ளார். விரக்தியின் விளிம்பில் தத்தளிப்பவர்களை மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை உறுதி செய்து, துறைமுகங்கள் மற்றும் விநியோக வழிகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்றும், மனிதாபிமான பணியாளர்கள் தங்கள் மீட்புப் பணிகளை அச்சுறுத்தலின்றி மேற்கொள்ள அனுமதிக்கும் வகையில், அனைத்து வழிகளைப் பாதுகாக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளார்.

## பழங்குடி இன மக்களுக்காக ஐ.நா.வில் திருப்பீடத்தின் குரல்

பழங்குடி மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், காலநிலை மாற்றம், வேளாண் தொழில் துறை, நகரமயமாக்கல் ஆகியவற்றால் தங்கள் நிலங்களை இழக்கும் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் ஐ.நா.விற்கான திருப்பீடத்தின் நிரந்தர பார்வையாளர் பேராயர் Gabriele Caccia அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் அவர், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் அணுசக்தி சோதனைகளின் விளைவுகள் உட்பட பழங்குடி சமூகங்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள், அவர்களுக்குரிய மதிப்பு வழங்கப்படாததால் எழுகின்றன என்று கூறியதுடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பழங்குடியினரின் இத்தகைய நிலையை வன்முறையின் வடிவம் என்று அழைத்து, இந்நிலை அவசரமாக கவனிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதையும் நினைவு கூர்ந்தார். பழங்குடி சமூகங்கள் ஒரு தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை அனுபவிப்பதை அங்கீகரித்து, அவர்களின் மரியாதையை நிலைநாட்ட வேண்டும் என்று கூறிய பேராயர் காச்சா அவர்கள், பழங்குடி மக்கள் தங்கள் கலாச்சாரத்தை பராமரிக்கவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் எடுத்துரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி - 55 விடைகள்

1. எருசலேமில் அவரின் தந்தை தாவீதுக்கு தோன்றிய மோரியா மலைமேல் எபூசியராகிய ஒர்னானின் கலத்தில் ஆண்டவருக்கு இல்லம் கட்ட தொடங்கினார். தம் ஆட்சியில் நான்காம் ஆண்டு இரண்டாம் மாதம், இரண்டாம் நாள் வேலைகளை தொடங்கினார்.

2. பெத்லகேம், ஏத்தாம், தெக்கோவா, பெத்சூர், சோக்கேர, அதுல்லாம், காத்து, மாசேரா, சீபு, அதோரயிம், இலாக்கிசு, அசோக்கா. சோரா, அய்யலோன், எபிரோன்

3. 1. சாலமோனின் ஆட்சி
   அ. முற்பகுதி
   ஆ. கோவில் கட்டப்படல்
   இ. பிற்பகுதி
   2. வடநாட்டு குலங்களின் கலகம்
   3. யூதாவின் அரசர்கள்
   4. எருசலேமில் வீழ்ச்சி

4. வலப்பக்கம் பெயர் "யாக்கீன்" பொருள் ஆண்டவர் நிலை நாட்டுகிறார்.
   இடப்பக்கம் பெயர் "போசுவா" பொருள் ஆண்டவர் ஆற்றல்

5. ஆண்டவரை போற்றுங்கள்: ஏனெனில் அவர்தம் பேரன்பு என்றுமுள்ளது.

6. சுவக்கீன் - இறைவனது தயாரிப்பு
   அன்னம்மாள் - ஆண்டவரின் அருள்

7. புனித தெர்ந்துலியன்

8. 1578ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் திகதி பிறந்தார்

9. மாலைதீவு

10. 12ம் பத்திநாதர்

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

**முதலாம் பரிசு: 1000/=**

M. **சில்வெஸ்ரர்,**
525/8, திருமலை வீதி
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு: 700/=**

திருமதி. V. **மாக்கிறேட்,**
இல. 73, உடையார் வீதி,
கல்முனை - 02.

**மூன்றாம் பரிசு: 500/=**

P. **அனஸ்ரிக்கா,**
இல. 16/16, பெயிலி குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்டோர் - 05 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

## என் சமையலறையில் ...



சப்பாத்தி தேய்க்கும் போது, தொட்டுக்கொள்ள சோள மாவு (கோர்ன் பிளவர்) பயன்படுத்தினால் நன்றாக வரும். மாவும் கொஞ்ச மாகத்தான் செலவழியும்.



இட்லிமாவு அரைத்தபின் ஒரு வெற்றிலையைக் கிள்ளிப் போட்டு வைத்தால், மாவு பொங்கி வழியாது.

பாகற்காய் குழம்பு செய்யும் போது, நாலைந்து மாங்காய்த் துண்டுகளைச் சேர்த்து வைத்துப் பாருங்கள்... பாகற்காயின் கசப்பு தெரியாது; உருசியும் கூடும்.



கொத்தமல்லியை சிறிதளவு நெய் விட்டு வறுத்துப் பொடி செய்து, சாம்பார் செய்து முடித்தவுடன் இந்தப் பொடியை போட்டு மூடிவைத்-தால், நல்ல மணத்துடன் இருக்கும்.


எந்தவிதமான சூப் செய்தாலும், சோள மாவு இல்லாவிட்டால், ஒரு டீஸ்பூன் அவலை வறுத்து, பொடித்து, சலித்து, அதில் சேர்த்துக் கொதிக்கவிட்டால் சூப் கெட்டியாகவும், உருசியாகவும் இருக்கும்.

**போட்டிக்கான பரிசுகள் அனுசரணை:**
திரு. லெஸ்லிராஜ்
ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி,
தன்னாமுனை.
0779780151




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 182 முடிவுகள்










## குருவுக்குப் புரியாதது சீடனுக்குப் புரிந்தது



குரு சீடனை அழைத்தார், "எனக்கு வயதாகிவிட்டது. எனது வாரிசாக உன்னை அறிவிக்கிறேன். அதற்கு அடையாளமாக இந்தப் புத்தகத்தை உன்னிடம் கொடுக்கிறேன்!" என்றார்.

"குருவே, உங்களிடமிருந்து இதுவரை பெற்றவையே எனக்குப் போதும். புத்தகம் தேவையில்லை!"

"மறுக்காதே. தலைமுறை, தலைமுறையாக குரு தன் வாரிசாகக் கருதும் சீடனுக்கு வழங்கும் புனிதப் புத்தகம் இது."

குரு வற்புறுத்தியதால், சீடன் புத்தகத்தை அவரிடம் இருந்து வாங்கினான். நெருப்பில் எறிந்தான்.

புத்தகம் படிப்பது ஒரு உத்வேகத்துக்காகத்தான். யாரோ ஒரு மகான் பற்றி, அவர் வாழ்ந்த வாழ்க்கை பற்றி, அவர் எப்படி எல்லாம் இருந்தார் என்பது பற்றிப் படிக்கையில் நம் வாழ்க்கையும் அப்படி அமைய வேண்டும் என்று நமக்கு ஊக்கம் வரலாம். ஆன்மீகப் பாதையில் பயணம் செய்ய உத்வேகம் வரலாம். மற்றபடி, புத்தகம் மூலமாகச் சொல்லிக் கொடுக்கும் தன்மையல்ல ஆன்மீகம்.

படைத்தவனே உருவாக்கிய புத்தகம் நீங்கள். அதைப் புரிந்துகொள்ளாமல், வேறு ஏதோ புத்தகத்தை எதற்காக நாடிப் போக வேண்டும்?


சிஷ்யனுக்குப் புரிந்தது அந்த குருவுக்குப் புரியவில்லை. ஆன்மீகம் தொடர்பான எல்லாப் புத்தகங்களையும் அந்தச் சீடனைப்போல் எரித்துவிட்டால், தேவை அற்ற போதனைகள் குழப்பாது. உயிரை உணர்வதற்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது!

**போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகள்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல் ஆரோக்கிய அன்னை ஆலயம் - அக்கரைப்பற்று









## நல் ஆரோக்கிய அன்னை ஆலயம் - கல்குடா






## கிறிஸ்து அரசர் பெருவிழா - மட்/ போதனா வைத்தியசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org